# திறவுகோல்

புரட்டாசி 2048 / மாத இதழ்

நீட் தேர்வு நிலை நாட்டுவது
மனித தர்மம் அல்ல மனுதர்மமே!

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு (பாகம் - தீவிர வாதம்)

பாம்புப் புற்றும், தேசப் பற்றும்




வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் குழு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.


இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# நீட் தேர்வு நிலை நாட்டுவது மனித தர்மம் அல்ல மனுதர்மமே!


மருத்துவர் பாரதிசெல்வன்

அறம் காக்கும் தமிழர்களாகிய நாம் அதை விரட்டியடிப்போம். நாட்டில் உயர்கல்வி கற்க பொருளாதாரம், கல்வி வாய்ப்புகள், வாழும் சூழல் ஆகியவற்றில் கீழ் நிலையில் இருப்பவர்கள், மேல் நிலையில் இருப்பவர்களோடு சமநிலையில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளிப்பதே சமூகநீதி. அதுவே மனித தர்மம்.

சமூகத்தில் உயர்ந்த பொருளாதாரம், முந்தைய தலைமுறையின் உயர்ந்த கல்வி நிலை, வேலைநிலை காரணமாக அமைந்த, போட்டித்தேர்வுகள் பற்றிய விழிப்புணர்வு, போட்டித்தேர்வுகளுக்கு தயார் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ள, உயர்நிலையில் உள்ளவர்களுக்கு உயர்கல்வி கற்க, தற்போது மக்களாட்சியிலும் வாய்ப்பளிப்பது நவீன மனுதர்மம்.

ஆயிரம் ஆண்டுகளாக, தலைமுறை தலைமுறைகளாக கல்விகற்கும் வாய்ப்பு பெற்ற முன்னேறிய சாதிகளைச் சேர்ந்த குடும்பத்து மாணவர்கள் கடுமையான போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ளும் அளவுக்கு கிராமத்து, ஏழை எளிய, சாதாரண கல்விக்கூடங்களில் கல்வி கற்கும் முதல் தலைமுறை மாணவர்களால் முடியாது. அப்படிப்பட்டவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பு வழங்கக் கூடாது என்று நுணுக்கமாகத் திட்டமிட்டு நீட் தேர்வு முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நீட் தேர்வு, சி பி எஸ் இ பாடத்திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படுகிறது. ஏழைக் குடும்பத்து மாணவர்கள், அதிக கட்டணம் செலுத்த வேண்டிய சி பி எஸ் இ பள்ளிகளை எட்டிப் பார்க்கக்கூட முடியாது.

சி பி எஸ் இ படித்த மாணவர்களிலும் 10ம் வகுப்பு முதலே, பல ஆண்டுகள் வழக்கமான பாடம் படிப்பதோடு, நீட் தேர்வுக்கென்று சிறப்பு பயிற்சி பெறும் மாணவர்களாலேயே நீட் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற முடியும். அவர்களிலும் வீட்டில் தங்காமல் பெரு நகரங்களில் அமைந்துள்ள சிறப்பு பயிற்சி நிறுவனங்களில் பல இலட்சம் கட்டணமாகச் செலுத்தி பயிற்சி எடுப்பவர்களால் மட்டுமே நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெறமுடியும். இது கிராமப்புற, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சாத்தியமே இல்லை.

பெரும்பாலான தமிழக மாணவர்கள் கற்கும் மாநிலப் பாடத்திட்டம் தரமற்றது அல்ல. மருத்துவக் கல்விக்கு அனுமதி பெற அறிந்திருக்கவேண்டிய அதிகபட்ச பாடங்கள் இத்திட்டத்தில் உள்ளன. உலகத்தரமான மருத்துவப் படிப்பிற்கான Text Book of Physiology by Guyton, Text book of Microbiology by Park போன்ற நூல்களின் அடிப்படையில்தான் தமிழ்நாடு பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த திட்டத்தில் படித்து, முக்கிய பாடங்களில் 200க்கு 197 மதிப்பெண் பெற்ற அனிதா போன்ற மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி கற்கும் அனுமதி மறுப்பது மனிததர்மம் அல்ல.

அது மனுதர்மம் அல்லாமல் வேறென்ன?

எனவே நாடு முழுக்க ஒற்றைப் போட்டித்தேர்வு என்பது ஒரே பாடத்திட்டத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். கிராமப்புற மாணவர்களும் பங்கேற்கும் வகையில் சிறப்பு பயிற்சி தேவைப்படாததாக இருக்க வேண்டும். அவரவர் தாய்மொழியில் வினாத்தாள் இருக்க வேண்டும்.

வினாக்கள் அந்தந்த தாய்மொழியில் இருந்தாலும் கேள்விகள் ஒன்றாக இருக்கவேண்டும். நீட் வினாத்தாளில் வினாக்கள் வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு கேள்விகளைக் கொண்டிருந்தன. இந்தி வினாத்தாள் வினாக்களை விட குஜராத்தி, வங்காள, தமிழ் வினாத்தாள் வினாக்கள் கடினமாக இருந்ததாக புகார் எழுந்துள்ளது.

இப்படியெல்லாம் பாடத்திட்டம், வினாக்களின் தன்மை ஆகியவற்றில் ஒற்றைத்தன்மை இல்லாதபோது ஒரே தேர்வு என்பது மனித தர்மம் அல்ல. இது மனுதர்மம் அல்லாமல் வேறென்ன?

பல்வேறு மொழி, இன, பண்பாட்டு மக்கள் வாழ்கின்ற இந்திய ஒன்றியத்தில் ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி என்று முழங்குவது போல ஒரே தேர்வு என்பதும் சாத்தியமும் இல்லை. மக்கள் நலனுக்கு சரியானதும் இல்லை.

மக்களாட்சியில் அரசின் திட்டங்கள் பெரும்பான்மையான கிராமப்புறங்களில் வாழும், ஏழை எளிய மக்களுக்கு பயனளிப்பதாக இருக்கவேண்டும். அரசு மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் மருத்துவ மாணவர்கள், படித்து முடித்த பிறகு இப்படிப்பட்ட மக்களுக்கு மருத்துவ சேவை ஆற்றும் வகையில்தான் மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்ப்பு நடத்தப்பட வேண்டும். அதனால்தான் தமிழ்நாட்டில் நுழைவுத்தேர்வு ரத்து செய்யப்பட்டு 12ம் வகுப்பு தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மாணவர் தேர்வு கடந்த சில ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் மருத்துவரானால் அவர்கள் தங்கள் சமூக மக்கள் வாழும் தங்கள் பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் பணியாற்றுவார்கள்.

வசதி படைத்த, நகரங்களில் வாழும் மற்றும் முன்னேறிய சமூகத்து குடும்ப மாணவர்கள் மருத்தவராகி பெரு நகரங்களிலும், வெளிநாடுகளிலும் பணியாற்றச் சென்றுவிடுவார்கள். பல ஆண்டுகளாக நுழைவுத்தேர்வு மூலம் மருத்துவம் படித்த புதுதில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்லூரியின் மருத்துவர்களில் 100க்கு 70 பேர் அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற அயல்நாடுகளில் பணியாற்றச் சென்றுவிட்டார்கள். ஆனால் தமிழ்நாட்டு மருத்துவக் கல்லூர்களில் படித்து மருத்துவரானவர்களில் 100க்கு 70 பேர் தமிழ்நாட்டில் பணியாற்று கின்றார்கள். அவர்களில் 100க்கு 53 பேர் அரசு மருத்துவமனைகளில் ஏழை, நடுத்தர மக்களுக்கு மருத்துவ பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே எதிர்காலத்தில் தமிழகத்து ஏழை எளிய மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்கும் அரசு மருத்துவமனைகளை ஒழித்துக்கட்டி, உலகவங்கி, உலக வர்த்தக நிறுவனம்

ஆகியவற்றின் அறிவுறுத்தல்படி மருத்துவத்துறையை தனியார் பெருமுதலாளிகள் வசம் ஒப்படைப்பதற்கான திட்டத்தின் முதல்படி தான் நீட் நுழைவுத்தேர்வு. இது மனித தர்மமே அல்ல. இது மனுதர்மம் அல்லாமல் வேறென்ன?

அப்படியானால் ஏழை, எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் மருத்துவம் போன்ற உயர்கல்வி கற்கக் கூடாதா? ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கு தரமான, இலவச மருத்துவ வசதி கிடைக்கக் கூடாதா? பெரும்பான்மை மக்களின் நலனிற்கு எதிரான இத்திட்டத்தை எதிர்த்து அம்மக்கள் போராடக் கூடாதா? இது பற்றிய விழிப்புணர்வு பெற்ற சமூக அக்கறை உள்ளவர்கள், அறிவாளர்கள் பாதிக்கப்படப்போகும் மக்களிடம் இது பற்றி எடுத்துரைத்தால் அது தவறா? அவர்களை தேச விரோதிகள் என்று சொல்வது அநீதியல்லவா?

இது நுழைவுத்தேர்வு மட்டுமே. மருத்துவராகப் பணியாற்றும் தகுதியை வழங்கும் இறுதித்தேர்வு அல்ல. மருத்துவம் படிப்பதற்கான ஆர்வமும், மருத்துவப் படிப்பு சார்ந்த அடிப்படை அறிவும் மட்டுமே நுழைவுத் தேர்வில் சோதிக்கப்படவேண்டும். இவற்றைத் தேவைக்கு அதிகமாகவே பெற்ற அனிதா போன்ற கிராமப்புற எளிய மாணவர்களுக்கு, நீட் தேர்வின் மூலம், மருத்துவப் படிப்புக்கான அனுமதியை மறுப்பது மனித தர்மம் அல்ல. அது மனுதர்மம் அல்லாமல் வேறென்ன?

நீட் தொடர்பான உச்சநீதிமன்ற  வழக்கில், நீட் தேர்வு நடத்தப்படக்கூடாது, அது அரசியல் சட்ட விதிகளுக்கு எதிரானது என்று 2013ம் ஆண்டு தீர்ப்பளித்த அப்போதைய தலைமை நீதிபதி அல்டமாஸ் கபீர் தனது தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:

1. மருத்துவ சேவைக்கு இன்றியமையாதது துறைசார்ந்த அறிவுக் கூர்மைக்கு மேலாக, மனித குலத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற அர்ப்பணிப்பே ஆகும். இந்தியாவில் அதிகம் படித்த, அதிகத் திறமையான மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நகர்ப்புறங்களிலேயே இருக்கிறார்கள். அவர்கள் நெருக்கடியான தருணங்களில் மக்களுக்கு மருத்துவ சேவையாற்ற வருகிறார்களா என்பது கேள்விக்குரியதே.

2. இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமும் தனக்கே உரிய பயிற்சி மொழி உள்ளிட்ட கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. அங்கேயும் நகர்ப்புற மாணவர்கள் சக கிராமப்புற மாணவர்களைவிட அதிக வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. தகுதிக்கு முக்கியத்துவம் அளிக்கிறேன் என்ற பெயரில் ஒற்றைத் தேர்வு முறையை ஆதரிக்கும் அரசின் முடிவு இந்த நகர்ப்புற கிராமப்புற மாணவர்களுக்கு இடையிலான இடைவெளியை அதிகரிக்கும். ஒற்றைத் தேர்வு முறை நாட்டின் வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு பாடத்திட்டம் இருக்கும் நிலையில் நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் சம நிலையிலான  போட்டிக் களத்தை அளிக்க முடியாது.

3. இந்திய அரசு தகுதிக்கு முக்கியத்துவம் அளிப்பது பாராட்டுக்குரியதுதான். ஆனால் கொள்கை முடிவுகள் எடுக்கும்போது, கிராமப்புற. பழங்குடிகள் வசிக்கும் பகுதிகளுக்கான மருத்துவ சேவை குறித்த நடைமுறை, அடித்தள உண்மைகள் மனதில் கொள்ளப்பட வேண்டும்.

இந்த தீர்ப்பையே இன்னொரு நீதிபதியான விக்ரமஜித் சென்னும் ஆதரித்தார். இது 2013ல் பெரும்பான்மைத் தீர்ப்பாக அளிக்கப்பட்டு, நீட் தேர்வுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

ஆனால் அந்த அமர்வின் இன்னொரு நீதிபதியான அனில் ஆர் தவே, பின்னாளில் தலைமை நீதிபதியாகி 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சட்ட அமர்வின் தலைமை நீதிபதியாக அமர்ந்து, 2013 தீர்ப்புக்கு எதிராக இந்திய அரசும் இந்திய மருத்துவ கவுன்சிலும் போட்ட சீராய்வு மனுக்களை விசாரித்து, முந்தைய 2013 தீர்ப்பை அதிரடியாக ரத்து செய்து நீட் தேர்வை நடத்தியே ஆகவேண்டும் என்று தீர்ப்பளித்த அனில் ஆர் தவே, 2013லேயே தனது மாறுபட்ட தீர்ப்பில் இப்படித் தெரிவித்துள்ளார்.

சாதி, மதம், இனம், பாலினம், சமூக ஏற்றத்தாழ்வுகள் என எந்தவொரு சலுகைக்கும் இடம் கொடுக்காமல் தகுதியான மாணவர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட வேண்டும். அவரது தலைமையிலான அமர்வின் தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்திய அரசு நீட் தேர்வை நடைமுறைப்படுத்த தமிழக அரசைக் கட்டாயப்படுத்துகிறது.

இப்போது சொல்லுங்கள், நீட் தேர்வை செயல்படுத்துவது மனித தர்மமா? மனுதர்மமா? என்று.

மருத்துவர் **பாரதிசெல்வன்**
மன்னார்குடி

## விவசாயி

- செண்பகராஜன்

இரணங்கள் ஆகிய மனங்கள்
ஏர் உழும் மாட்டை காணும்
நெல் விளையும் வயலில் சேற்றை காணும்
வாய்க்காலில் நீரை காணும்
வரப்பில் புல்லை காணும்
நீர் வரும் ஆற்றை காணும்
நகரை ஒட்டிய வயலை காணும்
அழுது புலம்பும் விவசாயிடம்
கண்ணீரை காணும்
இந்திய நாட்டு பிரதமரை
இந்தியாவில் காணும்
நாடு நம் நாடு விவசாயியை தேடு
இனி தேடு

# மனம் என்னும் குரங்கு

‘‘யான்எனது என்னும்செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகழும்’’
- திருவள்ளுவர்.

பொருள்:
நான், எனது என்னும் ஆணவம் அழிப்பவன் தேவர்க்கு எட்டாத உயர்ந்த உலகை அடைவான்.

மனிதன் பிறந்ததிலிருந்து இவ்வுலகை அவன் துறப்பது வரை திருக்குறளில் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு சென்றுவிட்டார் ஓர் ஞானி. ஆனாலும் நாம் எல்லோரும் நான் என்னும் அகந்தையிலேயே வாழ்கிறோம்.

நான் இறைவனை பார்க்கவில்லை. நாம் யாரும் பார்த்ததும் இல்லை. ஆனால், ஏதோ! ஒன்று நம்மை இயக்குகிறது என்பது உறுதியான ஒன்று. அதை உணர்வது ஒவ்வொருவரின் நிலைப்பாடு. பிறப்பு அந்த இயக்கம் கொடுத்தது. இறப்பு அந்த இயக்கம் கொடுத்தது. ஆனால் தாயிடம் கேட்டுப்பாருங்கள். நான் பெற்றேன், என்று சொல்லுவாங்க. உண்மையில் அந்த இயக்கம் அவர்களை ஓர் கருவியாக, பயன்படுத்தி இருக்கிறது. பாசம், அன்பு, பகை, வெறுப்பு, துரோகம், விரோதம், பிடித்த ஒன்று, பிடிக்காத ஒன்று எல்லாமே ஓர் மாயையின் பிடி.

உண்மையில் நம் மனம் எது ஒன்றை முழுமையாக நம்பி அதைப்பற்றி எண்ணுகின்றதோ! எதை ஆழ்ந்து சிந்திக்கின்றோமோ அதுவாக மாறக்கூடிய சக்தி நமக்கு உண்டு என்பதை நமக்கு முன் வாழ்ந்த மனிதர்கள் வாழ்ந்துக் காட்டி மறைந்தனர். அதற்கு சான்று தஞ்சை பெரிய கோயில்.

இராஜ ராஜ சோழனின் ஆழமான எண்ணம் அந்த கோயில். சோழனின் செயல் எதை உணர்த்துகிறது என்றால், எதையும் ஓர் முழுமனதோடு செய்தால் அது நடக்கும். எங்கே ஒற்றுமை இருக்கின்றதோ, அங்கே உலகமே போற்றும் அழிக்கமுடியா ஓர் செயல் நடக்கும்.

அப்பேற்பட்ட சோழனே கோயிலை கட்டிமுடிக்க இரவு பகலாக சிந்தித்தவன், நான் கட்டவில்லை. அவன் கட்டினான் நான் கருவி என்று சொன்னான். அவனை கருவியாக கருத வைத்தது அந்த இயக்கம்.

என் பிள்ளை, என் உறவு, என் சாதி, என் மதம் என்பதைத் தாண்டி நாம் ஓர் இயக்கத்தின் கீழ் இயங்கும் கருவி மட்டுமே.

தன்பிள்ளை என்று உங்கள் ஆசைகளையும், சிந்தனையும் உங்கள் பிள்ளைகளுக்கு திணிக்காதீர்கள். அந்த இயக்கம் உங்கள் பிள்ளைகளுக்கு மனம் என்ற ஒன்றை கொடுத்து இருக்கிறது. ஓர் செயலின் சரி, தவறை கூறுவது உங்கள் கடமை, ஆனால்! அதைதான் ஏற்க

வேண்டும் என்று ஒருபோதும் எண்ணாதீர்கள். திணிப்பை விதைக்காதீர்கள். இங்கு பெரும்பாலான தற்கொலைகளுக்கு காரணம் மனதிற்கும், திணிப்பிற்கும் ஏற்படும் போராட்டத்தின் விளைவே. இங்கு ஒவ்வொருவருக்கும் ஓர் வேலைகளை அந்த இயக்கம் கொடுத்து இருக்கிறது. மனம் என்னும் குரங்கை வேலை செய்ய துவக்குங்கள், உங்கள் உள்மனம் ஆழமாக எதை செய்ய சொல்கிறதோ, அதை செய்யுங்கள். ஆனால் அந்த மனதில் சிறு சந்தேகம் எழுந்தாலும் செய்யாதீர்கள். மனதின் தேடலை தொடருங்கள். அது உங்களை வழி நடத்தும் இயக்கமாக மாறட்டும்.

**- கண்ணம்மா**, உள்ளிக்கோட்டை

# திருநங்கை



ராஜேஷ்,
மன்னை

குரோமோசோம்களின்
விகிதாச்சாரத்தில் விதிசெய்த
விளையாட்டு நாங்கள் வீதிக்கு வந்தோம்

பால்கொடுத்த அன்னைகூட
என் பாலினத்தை பலிக்கிறாள்.

பிச்சை எங்கள் பிரதானமாகிபோனது.

அதுவும் பொய்த்ததால்
இந்த பசி எங்களின் படுக்கையைக்கூட பந்தியாய்
பரிமாற வைக்கிறது

இத்தனை இழி நிலையிலும்
ஏன் இந்த வாழ்க்கை.

இனிவரும் என்னை போன்றவரின் நிலைமாற
ஒரு போராட்டம் இறக்கும்வரை.

இப்படிக்கு
அவளாகிப் போன அவன்
அவனாகிப் போன அவள்....

# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
# பாகம் - தீவிர வாதம்



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

முதலில் உங்களைப் பொருட்படுத்தமாட்டார்கள், அடுத்து எள்ளி நகையாடுவார்கள், அடுத்து சண்டைப் பிடிப்பார்கள், அதன் பின். நீங்கள் வென்றிருப்பீர்கள்!
--மகாத்மா காந்தி

நீங்களும் தீவிர வாதி தான். இதனை கேட்டதும் ஒரு பதட்டம் உங்களுக்குள் ஏற்படுகிறதா? உங்களை நீங்களே தீவிரவாதி இல்லை என கூறி கொள்கிறீரா? நம்மை நாமே உணர முடியாமல் பதட்டம் கொள்ள வைக்கும் வலிமை அவ்வார்த்தைக்கு உள்ளது. தீவிர வாதி என்பது ஒரு அழகான தமிழ் சொல், கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தால் அதன் பொருள் எளிதில் புரியும். ஆனால் அவ்வாறு சிந்திக்க விடாமல், ஒரு எதிர்மறை பிம்பம் அவ்வார்த்தையின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. அரசுக்கெதிராக நியாயமாக போராடுபவர்களை தீவிரவாதி என அழைப்பதன் மூலம் அவர்களை பொதுமக்களிடமிருந்து அந்நியப்படுத்த இச்சொல்லை அரசுகள் வலுவாக பயன்படுத்துகின்றன. அதையும் மீறி ஏதோ ஓர் சந்தர்ப்பத்தில் அடக்குமுறைக்கும் அராஜகத்திற்கும் எதிராக தீவிரமாக வாதாடி இருப்பீர்கள் எனில் நீங்களும் தீவிர வாதி தான்.

‘‘வேப்பமர உச்சியில் நின்னு பேயொன்னு ஆடுதுன்னு விளையாடப் போகும் போது சொல்லி வைப்பாங்க - உந்தன் வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க’’ என்ற பட்டுக்கோட்டையாரின் எளிய வரியில் குறிப்பிடும் பேய் போல தீவிரவாதம் என்ற வார்த்தையும் இங்கு அச்சமூட்ட இவ்வரசுகள் பயன்படுத்துகின்றன. அதன் மூலம் தனக்கெதிராக யாரும் தங்கள் குரலை உயர்த்தாதவாறு பார்த்துக் கொள்கின்றனர்.

எங்கெல்லாம் அரசும் ஏனைய அமைப்புகளும் மக்களை நசுக்குகிறதோ, மக்களின் வாழ்க்கையை சிதைக்கிறதோ, இயற்கையை சுரண்டுகிறதோ அங்கெல்லாம் எதிர் குரல்கள் ஒழிக்க ஆரம்பிக்கின்றன. இந்த எதிர்குரல்கள் தீவிரமாக அரசுக்கும் அவ்வமைப்புகளுக்கும் எதிராக வாதாட ஆரம்பிக்கின்றன. இந்தப்புள்ளியில் அரசுகளோ அமைப்புகளோ மக்களின் பிரச்சனைகளை உணர்ந்து தங்களை திருத்தி கொள்ள வேண்டும். மாறாக மூர்க்கத் தனமாக அவ்வாறு வாதிடுபவர்களுக்கு எதிராக அடக்குமுறையை கையாள ஆரம்பிக்கும் பொழுது அங்கு பிரச்சனை தீவிரமடைய ஆரம்பிக்கிறது.

5 வயது சிறுமி சோஹா உடல் முழுவதும் குருதியுடன் ஸ்ரீநகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறாள். நெற்றியில் ஏற்பட்ட காயத்தால் கண் திறக்க முடியாமல் கிடக்கும் அவளது வயிறு மற்றும் கால்களில் பள்ளம் பள்ளமாக அடிபட்டு குருதி வழிந்தோடுகிறது. சோஹா தன்னை பரிசோதிக்கும் மருத்துவரிடம் வீட்டு வாசலில் விளையாடும் பொழுது யாரோ என்மீது பட்டாசை வீசிவிட்டனர் என்று வலியால் துடித்து கொண்டே கூறுகிறாள். அவள் கூறுவது போல் அது பட்டாசு அல்ல, போராட்டக்காரர்களை ஒடுக்க அவ்வரசு பயன்படுத்திய பெல்லட் குண்டுகள் என்பது மருத்துவருக்கு நன்றாக தெரியும். சோஹாவை

போன்று பல நூறு பேர் அன்று அம்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அரசுக்கெதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தை அடக்குமுறையால் ஒடுக்க முனைந்த திட்டமிட்ட தாக்குதல் அது. அத்தாக்குதலுக்கான தொடக்க புள்ளி ஒரு வாரத்திற்கு முன் புர்ஹான் முசாஃபர் வாணி பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டது. புர்ஹானின் கொலையை கண்டித்து அவருடைய இறுதி சடங்கில் பங்கெடுத்தோரின் எண்ணிக்கை சுமார் 10 லட்சம். அதன் பின் நடந்த இவ்வார்ப்பாட்டத்தில் அரசின் துப்பாக்கி சூட்டிற்கு பலியானவர்கள் 37 பேர். இது அரசு கணக்கு, உண்மையான கணக்கு இன்னும் அதிகமாக இருக்கும்.

அரசுக்கெதிராக ஆயுதம் ஏந்தியவருக்கு ஆதரவாக 10 லட்சம் பேர் கலந்து கொண்டதால் அவருடைய ஆயுத போராட்டத்தை நாம் ஏற்று கொள்ள தேவையில்லை அதேநேரத்தில் அரசு தீவிரவாதி என கூறி சுட்டு கொன்ற ஒருவருக்கு ஆதரவாக 10 லட்சம் மக்கள் கூடுகிறார்கள் எனில் அவ்வரசு அம்மக்களுக்கு எதிராக அவ்வளவு அடக்குமுறையை கையாள்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். ஒன்றும் அறியாத 5 வயது சிறுமியை தாக்கியதால் வெகுண்டெழுந்த அவளின் தந்தை மற்றும் சித்தப்பா அரசுக்கெதிரான அடுத்தடுத்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றனர்.

சோஹாவின் குடும்பத்தார் போல தான் ஒவ்வொரு அடக்குமுறையின் பொழுதும் சாமானியர்களை தனக்கெதிராக திருப்புகிறது அவ்வரசு. அப்படி திரண்டவர்கள் தான் புர்ஹானின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்ற 10 லட்சம் பேர். இது காஸ்மீரில் மட்டுமல்ல இது போன்று ஏனைய பகுதிகளிலும் பல்வேறு காரணங்களுக்காக அந்தந்த அரசுகள் அம்மக்கள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுவதும் அம்மக்கள் அரசுகளுக்கெதிராக கிளர்ந்தெழுவது தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கின்றது.

அவை எல்லை பிரச்சனைக்கான போராட்டமாக, நிலக்கரி சுரங்கம் தோண்டுகிறேன், மீத்தேன் எடுக்கிறேன், பெட்ரோல் எடுக்கிறேன் என அம்மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் அரசுக்கெதிரான போராட்டமாக, இன ஒழிப்பிற்கு எதிரான போராட்டமாக, சுரண்டலுக்கெதிரான போராட்டங்களாக இருக்கலாம். ஆனால் இவை அனைத்திற்கும் அடிப்படை காரணம் அரசும் அரசின் அமைப்புகளும் மக்களுக்கெதிராக அடக்குமுறையை கையிலெடுப்பது மட்டும் தான்.

உரையாடல்கள் அற்று போகும் இடத்தில் தான் போராட்டங்கள் முளைக்கின்றன. அவ்வுரையாடல் மூலமே தன் மக்களின் பிரச்சனைகளை அரசுகள் சரிசெய்யும் பொழுது போராட்டங்கள் அர்த்தமற்றதாகின்றன. ஆனால் அரசுகள் அதனை செய்யாமல் அடக்குமுறையை கையாளும் பொழுது தீவிர வாதிகள் உருப் பெற்று தீவிரமாக போராட ஆரம்பிக்கின்றனர். அடுத்த படிநிலையாக சிலர் ஆயுதமேந்தி நகர்கின்றனர்.

ஆயுதமேந்தியவர்கள் அனைவருக்குள்ளும் நியாமான பின்புலம் இருக்குமா எனில் நிச்சயம் இருக்காது. ஏனெனில் அவர்களுக்குள்ளும் அந்நிய சக்திகள் புகுந்து அப்போராட்டங்களை பயன்படுத்திக் கொள்கின்றன என்பதை மறுப்பதிற்கில்லை. இதை தான் நெல்சன் மண்டேலா தனக்கு எதிரான குற்ற சாட்டிற்கு நீதிமன்றத்தில் பதிலளிக்கையில் இவ்வாறாக தெரிவித்தார் ‘‘ஆம், சுமார் 21 ஆண்டுகள் அறப்போராட்டம் நடத்தி அதில் எந்த பயனும் இல்லாததால் நாங்கள் ஆயுத போராட்டத்தின் பக்கம் போக வேண்டிய சூழல் ஏற்பட்டது.

அப்போராட்டங்களில் அந்நிய சக்திகளின் ஊடுருவலும் உதவியும் இருந்தது என்பதை நான் ஏற்று கொள்கிறேன் ஆனால் போராட்டம் என்பது எங்களுடைய இன உரிமைக்காக நடத்தப்படுகிறதே ஒழிய அந்நிய சக்திகளின் தூண்டுதலால் அல்ல''.

அதன் பிறகு சுமார் 27 ஆண்டுகள் சிறையில் இருந்து விடுதலை பெற்று அங்கு ஓர் இன வெறி அற்ற சமத்துவ அரசை அவர் நிறுவினார் . அவர் கைது செய்யப்பட்ட பொழுது அவ்வரசு அவரை அரசுக்கெதிராக கலகம் செய்த தீவிரவாதி என்றே குறிப்பிட்டது.

போராட்டங்களை வன்முறையென்றும் போராட்டக்காரர்களை வன்முறையாளர்கள், தேச விரோதிகள், தீவிரவாதிகள் என சொல்ல நமக்கு நம் அரசு பழக்கப்படுத்திவிட்டது. நாமும் பழகிவிட்டோம். இன்று நெடுவாசல், கதிராமங்கலம், நீட் என ஒவ்வொன்றிற்கும் போராடுபவர்களை இவ்வரசுகள் வன்முறையாளர்களாக விரைவில் சித்தரித்துவிடும். நாம் அவர்களை எவ்வாறு அழைக்கப் போகிறோம்?

இது போன்ற மக்கள் போராட்டங்களை முன்னெடுத்த அனைவரும் தீவிரவாதி என்ற பெயரிலேயே அரசுகள் அழைக்கின்றன. லெனினும், பிடலும், காந்தியும்,நேதாஜியும், மாவோவும் என அனைவரும் அரசுக்கெதிராக கலகம் செய்த தேச துரோகிகளாகவும் தீவிரவாதிகளாகவுமே அழைக்கப்பட்டனர். ஆனால் வரலாறு அவர்களை புரட்சியாளர்களாக தலைவர்களாக ஏற்று கொண்டது. ஏனெனில் இவர்கள் அந்தெந்த அரசுக்கு எதிராக இருந்தார்களே ஒழிய மக்களுக்கு எதிராக அல்ல.

இதை அரசுகளும் அமைப்புகளும் உணர வேண்டும். அடக்குமுறையை விடுத்து உரையாடலையும் பேச்சுவார்த்தையும் தான் தீர்வாக அரசுகள் முன்னெடுக்க வேண்டும். மக்களுக்காக தான் அரசுகளே ஒழிய அரசுகளுக்காக மக்கள் வாழவில்லை என்பதை மனதில் நிறுத்தி இவ்வரசுகள் செயல்பட வேண்டும்.

இங்கு நடைபெறும் போராட்டங்கள் அனைத்தும் மக்களின் வாழ்வை சிதைக்கும் காரணிகளுக்கெதிராக தான் நடைபெறுகின்றன. எங்கெல்லாம் அரசு தவறுகள் இழைக்கிறதோ, அத்துமீறுகிறதோ அங்கெல்லாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒருமித்த குரலில் அரசுகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டி வாதிட ஆரம்பிக்கும் பொழுது அரசும் அறம் காத்து ஆட்சி நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படும், போராடுபவர்களும் தீவிரவாதிகள் என தனிமைப் படுத்தப்படமாட்டார்கள். இதற்காக அனைவரும் அனைத்திற்கும் போராட முடியுமா என கேட்டால், ஆம் இன்றைய சூழல் சீராகும் வரை தீவிரமாக வாதிட்டு தான் ஆக வேண்டும். நாம் ஒற்றுமையாக குரல் கொடுக்கும் பொழுது அதிகார வர்க்கம் நம் குரலுக்கு செவி சாய்த்து நம்முடன் உரையாட ஆரம்பித்து தான் ஆக வேண்டும். மக்களின் ஆதரவு பெற்ற எந்த போராட்டமும் வீழ்ந்ததாக வரலாறு இல்லை. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

அடுத்த பாகம் - வன்புணர்வு. தொடரும்

ஒற்றுமையுடன்

**- ரா.ராஜராஜன்,** மன்னார்குடி

# முதியோர் இல்லம்

நீ உண்டான நாள்முதலே
உறக்கமிழந்தேன்..

உருவாக உருவாக
உணவிழந்தேன்..

உன் அப்பன்
எனக்கு அன்னையானான்...

நான் எடுத்த வாந்தியை
கையில் ஏந்தினான்.

உன்னோடு என்னையும்
நெஞ்சில் ஏந்தினான்.

உன் குரல் எப்படி
உன் நிறமெப்படி என்று
நாளொருமேனியும்
பொழுதொருவண்ணமுமாய்
ஏங்கி தவித்தோம்.

நீயும் வந்தாய்.

எங்கள் வாழ்க்கையே நீயாய் ஆனாய்..
என் அழகு செல்வமே ..

இதோ இன்றும் உன் வரவுக்கத்தான் நாங்கள்
ஏங்கி தவிக்கிறோம்.

இறப்பதற்கு முன் ஒரு கணம்
உன்னோடு இருக்க ஆசை
எங்களுக்கு.....

நீ மறந்த முகவரி இதோ.
முதியோர் இல்லம்



கோ.பாரதிபிரியா பி.காம்
3ஆம் ஆண்டு
சாஸ்திரா பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ராஜேஷ், மன்னை

# கேவலம் உனக்கு தான்!.....

''ஈனங்கெட்ட மனிதர்களால்
பிறந்ததடா சாதி,
அதை வீறுகொண்ட கழுதைகளாய்
சுமக்குதடா இந்த நீதி!...

வேட்டி அவிழும் நிலை
உன் இடுப்பில் உள்ளதா? - இல்லை,
வேதங்கள் ஓதும் வெள்ளை
நூல்களிடம் உள்ளதா?

தீண்டிவிட்டதனால் தேகம்
நிலைகுலைந்துவிடாது! - எல்லை
தாண்டிவிட்டதனால் எருமை உயிர் எய்திடாது!...

செருப்புகள் படி தாண்டிவிட்டதனால்
செங்கால்களுக்கு விடுதலையா கிடைத்துவிட்டது?!
இன்றுவரை இல்லையே?.....

''எங்கடா அந்த எச்சில்? (தீண்டாமை),
துப்பிவிடாதே எங்கேயும்....
உமிழ்ந்துகொள் - இல்லை
உன்னை நீ உணர்ந்து கொள்!....

மணியடித்து சிரிக்காதே
''கேவலம் உனக்குதான்!.....''

சாதி(தீ)யை ஒழிக்க சணலாய் இணையும் ஓர் கணல்!......''

குறிப்பு : சுதந்திர தினம் கொண்டாடும் ஒவ்வொரு இந்தியனுக்கும்,
அதே இந்தியர்களால் மறைக்கப்பட்ட,
தீண்டாமை அழிக்க பாடுபட்ட,
ஒரு மாமனித போராளிகளுக்கு
இது சமர்ப்பணம்!.....

- பழனிவேல் ஆறுமுகம்

# கூட்டத்தில் ஒருவன்..



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

‘‘என்னடா இது இந்தியாவுல பராமரிப்பு என்பதே இல்லையே! சிங்கப்பூர் போன்ற நாடுகளில் எல்லாம் எப்படி பாராமரிக்கிறார்கள், நம்மால் ஏன் முடியவில்லை?‘‘ என்று ஆதங்கப்படாத சராசரி குடிமகனை காண்பதரிது.

‘‘சிங்கப்பூர் சின்ன நாடு, அதனால் சாத்தியம் ஆயிற்று. நம் நாடு பெரிய நிலப்பரப்பை கொண்டது சாத்தியம் இல்லை‘‘ என்று அதிகாரப்பூர்வ நிர்வாகிகள் பதில் கூறும் முன்னே இங்கே கூவம் ஆற்றை எவ்வித சுவாச பிரச்சனையும் இன்றி கடந்து போகும் சகிப்பு தன்மையின் உச்சத்தில் இருக்கும் நபர்கள் பொதுவாக பதில் அளிப்பார்கள்.

இதில் எது உண்மை?

கூட்டம் அதிகம் உள்ள சென்னை திரை அரங்குகள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன. ஆனால் குறைந்த பார்வையாளர்களை கொண்ட சிறு நகரங்களில் உள்ள திரை அரங்குகள் மிக மோசமாக பராமரிக்கப்படுகின்றன. இதற்கு என்ன காரணம்?

இங்கே பிரச்சனை கூட்டமா? நிதி பற்றாக்குறையா? அலட்சியமா? அந்த காலத்தில் நாடக கொட்டகைகளில் நாடங்கங்கள் சரியான நேரத்திற்கு ஆரம்பிக்க மாட்டார்கள்..கூட்டம் சேர்ந்த உடன் ஆரம்பிக்கலாம் என்று நினைப்பார்கள். காட்சிக்கு முதலிலே நுழைவுச் சீட்டு எடுத்தவர்கள் காட்சி ஆரம்பிக்கும் முன் வெளியில் சென்று சற்று இளைப்பாரலாம் என்று சென்று விடுவார்கள்.

இப்படி பலர் சென்று விட சென்றவர்கள் வந்ததும் நாடகம் ஆரம்பிக்கலாம் என்று நிர்வாகமும், முதலில் நாடகம் ஆரம்பிக்கட்டும், பின் நாம் உள்ளே செல்வோம் என்று பார்வையாளர்களும் நினைக்க முடிவில் நாடகம் ஆரம்பித்த மாதிரி தான்.

ஏறக்குறைய அதே போல் தான் இந்த திரை அரங்குகளின் கதி. நீங்கள் சரியாக பராமரியுங்கள் நாங்கள் திரை அரங்கம் வருகிறோம் என்று பார்வையாளர்களும், முதலில் கூட்டம் வரட்டும் பின் பராமரிப்போம் என்று நிர்வாகமும் மாற்றி மாற்றி ஒருவர் மாற்றத்திற்காக காத்திருப்பது நல்ல வேடிக்கை.

ஆனால் கடந்த கால வெற்றி சரித்திரங்கள் கூறுவது என்ன? விற்பனை செய்பவர்களால் சரியான முறையில் பராமரித்து வைத்து இருக்கும் பொருள், நுகர்வோரால் நன்றாக கொண்டாடப்பட்டுள்ளது.

அதனால் தான் சென்னை போன்ற பெரும் நகரங்களில் உள்ள உயர் தர திரை அரங்குகளில் சுய ஒழுக்கத்தை முழுமையாக கடைப்பிடிக்கும் ஒருவன், ஒரு சிறு நகரில் மோசமான தரத்துடன் இருக்கும் திரை அரங்குகளில் சுய ஒழுக்கத்தை கடைப் பிடிப்பது இல்லை.

மனிதன் ஒருவன் தான், ஆனால் மன நிலை சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது.

சரியான சூழ்நிலை அமையும் போது சரியான மன நிலையில் இருப்பது தான் மனிதனின் இயல்பு. இது நிரூபிக்கப்பட்ட ஒன்று.

இதை இன்னும் ஆழமாக விளக்கலாம்.. எப்படி?

குப்பைத்தொட்டி எதுவும் வழங்கப்படாத ஒரு இடத்தில், ஒருவன் குப்பையை தரையில் போட கூடாது என்று எதிர்பார்ப்பது தவறு.

குப்பைத் தொட்டி உள்ள இடங்களில் தினசரி குப்பையை அப்புறபடுத்தாமல், ஒருவர் ஏன் குப்பைத் தொட்டியில் சரியாக குப்பையைப் போடவில்லை என்று சொல்வதும் தவறு.

குப்பைத்தொட்டிகள் வைத்து, தினசரி குப்பையை முறையாக அகற்றிய பின்னரும், ஒருவர் தரையில் குப்பையை போடும் போது, உடனே நிர்வாகம் சலித்துக் கொண்டு குப்பைத் தொட்டி வைப்பதே வீண் என்ற முடிவுக்கு வருவது நிர்வாக திறமையின்மை.

ஏன் குப்பைகளை அதற்குரிய சேகரிக்கும் இடத்தில் போட வேண்டும் என்பதை விளக்கும் வண்ணம் விழிப்புணர்வை ஊடகங்கள் கொண்டு ஏற்படுத்த வேண்டும்.

அப்படியும் தவறு செய்பவர்களுக்கு, இது போன்ற குற்றங்களுக்கு சட்டத்தில் உள்ள தண்டனையைக் கூறி அவரை சரியாக செயல்பட வைப்பதே நல்ல நிர்வாகத்தின் சான்று.

ஒரு குழந்தையை அதன் போக்கிலேயே விட்டு வளர்ப்பதை எந்த பெற்றோர் விரும்புவார்கள்? அந்த குழந்தை ஒரு அசிங்கத்தை கையில் தொடும் போது, அது அசிங்கம் என்று உணர்த்தி அடுத்த முறை அதை தொடாதவாறு செய்வதே நல்ல குழந்தை வளர்ப்பு.

அதே போல் தான், தவறு செய்பவர்களை அவர்கள் போக்கிலே விடுவதும் அல்லது அவர்களை தவறு செய்ய தூண்டுவதும் ‘‘நிர்வாக சீர்கேடுகள்‘‘

இப்போது நம் தலைப்பின் விடயத்திற்கு வருவோம்.

அதிக மக்கள் இருக்கிறார்கள் அதனால் தான் கட்டுப்படுத்த முடியாது என்று சொல்பவர்களில் பலர் திருப்பதி தரிசனத்தை பார்த்தவர்கள் தான்.

முதலில் அதிக மக்கள் என்பதை நாம் ஏன் எதிர்மறையாக பார்க்க வேண்டும். அதிக வேலையாட்கள், அதிக நிர்வாகிகள், அதிக நுகர்வோர்கள் என்ற ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்துமே நமக்கு கிடைக்கிறது அல்லவா? மற்ற வளர்ந்த நாடுகளைப் போல் மக்கள் சக்தியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

கூட்டம் அதிகம் இருந்தால் என்ன? அதற்கேற்ற நிர்வாகிகளும் தொழிலாளிகளும், வேலை ஆட்களும் அதிகமாகிறதே! பின் என்ன பிரச்சனை?

ஒரு சிறிய கட்டடம் உருவாக்க குறைந்த ஆட்கள் போதுமானது. அதே போல் பெரிய

கட்டடம் உருவாக்க அதிக ஆட்கள் தேவைப்படுவார்கள். அதிக கூட்டம் இருப்பதால் பெரிய கட்டடங்கள் சரியாக கட்டி முடிக்கப்படாதா?


இந்தியாவின் பலம், மக்கள் சக்தி என்பதை ஒரு நாளும் மறக்க வேண்டாம். உலகின் ஒவ்வொரு வளர்ந்த நாடுகளின் பார்வை, இந்தியாவின் மேல் உள்ளதற்கான காரணம் கணக்கற்ற நுகர்வோர் இருப்பதால் தான். நம் மக்கள் சக்தியை வேறு யார் யாரோ பயன்படுத்தும் போது நாமே ஏன் நம்மை சரியாக பயன்படுத்த முடியாது?

எனவே கூட்டம் அதிகம், பராமரிக்க முடியாது என்ற காரணத்தை நுகர்வோர் நாம் சொல்ல வேண்டாம். மேலும் பெரிய நாடு அதனால் தான் செய்ய முடியாது என்ற காரணமும் இனி வேண்டாம். இவ்ளோ கூட்டத்திற்கு சிறிய நாடாக இருந்தால் தாங்க முடியுமா?

கூட்டத்தை கண்டு அஞ்ச வேண்டாம். கூட்டத்தின் மூலம் கூடுதல் பலம் பெறுவோம்.

இப்படிக்கு,
கூட்டத்தில் ஒருவன்

## செந்தில் பக்கிரிசாமி,
மன்னை



பா. வீரஅரசு, 9ம் வகுப்பு



S. ரத்தனாஸ்ரீ,
2ம் ஆண்டு ஆங்கிலம் (இளங்கலை)
இராஜகோபாலசாமி கலைக்கல்லூரி, மன்னார்குடி

# கீழடி



மனோ குணசேகரன்

பெயரே நமக்கு உணர்த்துகிறது, மண்ணுக்கு அடியில் ஒரு மிகப்பெரிய பண்டைய நகர நாகரிகத்தையும் பழந்தமிழர் வரலாற்றையும். தன் கீழ் புதைத்துக் கொண்டு வெளியில் பசுமையான கிராமமாக காட்சி தருகிறது. தோண்டி பாருங்க, மக்களே! உலக வரலாற்றையே மாற்ற வல்லவன் நான் என்று அங்கு கிடைத்த பொருட்கள் திமிராக சொல்கிறது. தமிழனின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் பழமையையும் இவ்வுலகிற்கு உணர்த்தும் விதமாக.

மதுரையிலிருந்து இராமநாதபுரத்தின் அழகன்குளம் துறைமுகத்திற்குச் செல்லும் பண்டைய வணிகப் பாதையில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி என்ற ஊரின் கிழக்கே சுமார் ஒரு கி.மீ தொலைவில், மணலூர் கண்மாயின் மேற்கரையில் உள்ள பள்ளிச்சந்தைத் திடல் என்ற பெயரிலான மண்மேட்டில் இந்த அகழாய்வு தொடங்கப்பட்டது. ஆதிச்சநல்லூர் தொல்லியல் களத்துக்கு அடுத்து தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான அகழாய்வு இதுவேயாகும்.

கீழடி கண்டுபிடிப்பின் தனித்துவம் என்னவென்று நம்மில் பலருக்கு தெரியவில்லை சங்க காலத் தமிழகத்தில் ஒரு நகர நாகரிகம் இருந்ததற்கான தொல்லியல் ஆதாரங்கள் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை. முதன்முறையாக ஒரு நகர நாகரிகம் இருந்ததற்கான முழுமையான அடையாளங்கள் கீழடியில்தான் கண்டறியப்பட்டுள்ளன. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட, வளர்ச்சி பெற்ற முழுமையான ஒரு நகரம் இப்போது இங்கு கண்டறியப்பட்டுள்ளது. இக்கண்டுபிடிப்பு தமிழக வரலாற்றுக் காலத்தை புரட்டிப்போடும், தமிழகத்தின் இலக்கியத்திற்கும் வரலாற்றிற்கும் அறிவியல் சான்று கீழடி.

இதுவரை வரலாற்றாளர்கள் பலரும் பழந்தமிழகத்தை ஒரு இனக்குழு சமூகமாகத்தான் வரையறுத்தார்கள். சிந்துவெளி நாகரிகத்தைப் போல, ஒரு நகர நாகரிகம் இங்கு இல்லை. இலக்கிய வர்ணனைகளை மட்டும் வரலாற்று ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியாது என்று கூறி வந்துள்ளனர் இதுவரை. ஆனால், தற்போது கீழடியில் கண்டறியப்பட்டுள்ள தரவுகள் அந்தக் கருத்தை உடைத்தெறியும் விதமாக சங்க காலத்தில் நகர நாகரிகம் சிறப்பாக இருந்ததை உணர்த்துகின்றன.

கீழடியில் கண்டுபிடிக்கப்பட்டது ஒரு நகரத்தினுடைய முழுமையான கட்டமைப்பு. வரிசை வரிசையாக கால்வாய்கள் அதன் முகப்பிலே பெரும் தொட்டிகள், அந்த தொட்டிக்குள் தண்ணீர் உள் செல்லவும் வெளிச் செல்லவுமான அமைப்புகள், அந்தக் கால்வாய் தடத்தை ஒட்டி சிறிதும் பெரிதுமான ஆறு உலைகள், கால்வாயின் ஆரம்பப் பகுதியில் வட்டக் கிணறுகள் மூடிய வடிகால்கள் திறந்த வடிகால்கள் சுடுமண் குழாய்களினால் ஆன வடிகால்கள் என கூறிக்கொண்டே போகலாம்.

இது போன்ற அமைப்புகள் வேறு எந்த ஆய்வு பகுதிகளிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிசுத்தான் பகுதியைச் சேர்ந்த சூது பவளத்தினால் ஆன மணிகளும், ரோமாபுரியைச் சார்ந்த மண்பாண்டங்களும் கிடைத்துள்ளன. பானை ஓடுகளில் தமிழ் பிராமி எழுத்துகள் கண்டறியப்பட்டுள்ளன.ஒரு தொழிலகம் இருந்ததற்கான அடையாளங்களும் கிடைத்துள்ளன. நெசவுக்குரிய தக்கையில் துவங்கி எண்ணற்ற தொழில்நுட்பக் கருவிகள் கிடைத்துள்ளன. ஆக அப்பகுதி வணிகமும் பண்பாடும் கொண்ட பெருநகரமாக இருந்துள்ளது.

அங்கு கண்டறியப்பட்ட சுமார் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களை பார்த்தால் வணிகம், கலை, தொழில்நுட்பம், மொழி, கல்வி அறிவு, என அனைத்திலும் சிறந்த சான்றுகளை காட்டுகிறது அந்நகரம் நமக்கு.

நான்கு ஆண்டுக்கு ஒருமுறை நடக்கும் வரலாற்றுப் பேரவை மாநாடில் வரலாற்று அறிஞர் பேராசிரியர் ரொமிலா தாப்பர் கூறுகையில் தமிழகத்தில் கீழடியில் கிடைத்துள்ள மிக முக்கியமான கண்டுபிடிப்புகள் இவை. இக்கண்டுபிடிப்புகளின் மூலம் தமிழக வரலாற்றை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டி வரும் என்றார், என்பது குறுப்பிடத்தக்க ஒன்று.

இத்தனை சிறப்பு மிக்க வரலாற்று அகழாய்வுப் பணி முறையாக நடத்தப்படாதது வேதனைக்குரியது. கீழடியில் 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வந்த அகழாய்வு பணிகள் காட்டிலும் 2017ம் ஆண்டில் சிறப்பாக இல்லை. கீழடி அகழாய்விற்கு மத்திய அரசும், மத்திய தொல்லியல் துறையும் போதுமான முக்கியத்துவம் கொடுக்காமல் இழுத்தடிப்பதாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்து கடந்த பிப்ரவரியில் அனுமதி அளிக்கப்பட்டது.

பிறகு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டையடுத்து நடைபெற்ற போராட்டங்களின் விளைவாக கடந்த மே மாதம் 27ஆம் தேதி பூமி பூஜையுடன் மூன்றாம் கட்ட கீழடி அகழாய்வுப் பணிகள் தொடங்கின.

முதல் இரண்டு கட்ட அகழாய்வின்போது கீழடிக்குப் பொறுப்பாக இருந்த தொல்லியல் கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருட்ணன் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். தொடர் அகழாய்வில் ஈடுபட்டிருந்த ஓர் அலுவலரை பணியிட மாற்றம் செய்தது மிகவும் தவறு. இது கீழடி அகழாய்வை மழுங்கச் செய்யும் முயற்சி என்பதை கவனிக்க வேண்டும் நாம்.

இது தொடர்பாக மத்திய தொல்லியல் துறையின் மீது குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ள நிலையில். வருகின்ற செப்டம்பர் மாதத்துடன் கீழடி அகழாய்வை முடிவுக்குக் கொண்டு வர மத்திய தொல்லியல் துறை திட்டமிட்டுள்ளதாகவும், மூன்றாம் கட்ட அகழாய்வில் கண்டறியப்பட்ட தொல்லியல் பொருட்களை மக்களின் பார்வைக்கு வைக்காமலேயே, மூட்டை கட்டி மைசூர் ஆவணக் காப்பகத்திற்கு கொண்டு செல்ல முயற்சி நடப்பதாகவும் தகவல் வந்து கொண்டிருக்கிறது.

கீழடியில் இருக்கிற தொல்லியல்மேடு 110 ஏக்கர். இதில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக அகழாய்வு நடந்துள்ள பரப்பளவு வெறும் அரை ஏக்கர் மட்டும் தான். அதாவது ஒரு சதவீத நிலப்பரப்பு கூட ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இந்நிலையில்தான்,அகழாய்வை

நிறுத்தி விடலாம் என்ற முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது.

குசராத்தில் உள்ள தொழவீராவில் 13 ஆண்டுகள் அகழாய்வு செய்தவர்கள், ஆந்திராவில் உள்ள நாகார்சுன கொண்டாவில் 10 ஆண்டுகள் அகழாய்வு செய்தவர்கள், அகிசித்ராவில் 6 ஆண்டுகளும், குசராத்தில் உள்ள லோத்தலில் 5 ஆண்டுகளும் அகழாய்வு செய்தவர்கள், கீழடி ஆராய்ச்சியை மட்டும் இரண்டரை ஆண்டுகளில் முடிவுக்கு கொண்டு வருவதன் பின்னணி என்ன என்பது தான் நமக்கு கேள்வி எழுப்புகிறது.

இது மட்டும் அல்லாமல் பல விதமாக சந்தேகம் எழுப்பும் விடயங்கள் நடைபெற்று வருகிறது அகழாய்வில் கிடைக்கும் கரிமூலப்பொருட்களின் மாதிரியை வேதிப்பொருள் ஆய்வகங்களுக்கு அனுப்பி கார்பன்  14 பகுப்பாய்வு எனும் முறையில் ஆய்வு செய்து, அப்பொருளின் காலத்தை நிர்ணயிக்கின்றனர். அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள பீட்டா அனலைசிஸ் ஆய்வு நிறுவனத்திற்கு இவை அனுப்பப்படுகின்றன.

அகழாய்வில் கண்டறியப்பட்ட பொருட்களில் எத்தனை பொருட்களின் மூலக்கூறு மாதிரிகளை கார்பன்-14 பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டும் என்பதை மத்திய தொல்லியல் துறை முடிவு செய்கிறது.

இராசசுதானில் உள்ள காளிபங்கனில் நடத்தப்பட்ட அகழாய்வில் 28 பொருட்களின் மாதிரியை ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளனர். தொழவீராவில் இருந்து 20 பொருட்களின் மாதிரியை ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளனர். கிரிசராவில் இருந்து 15 பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஆனால், கீழடியில் கண்டறியப்பட்ட மூலப் பொருட்களின் மாதிரியில் இரண்டே இரண்டை மட்டும்தான் கார்பன்  14 பகுப்பாய்வுக்கு அனுப்ப மத்திய தொல்லியல் துறை அனுமதி வழங்கியுள்ளது. குறைந்தபட்சம் 10 பொருட்களின் மாதிரியையாவது ஆய்வுக்கு அனுப்பவேண்டும் என்பது தொல்லியலாளர்களின் கருத்து.

இரும்புக்காலம் துவங்கி, வரலாற்றுக் காலம் வரை தொடர்ச்சியான ஆதாரங்கள் கிடைக்கும் இடம் கீழடி. எனவே இந்த ஆதாரங்களை அறிவியல் பூர்வமாக நிறுவ இவ்வாய்வு மிக முக்கியமானது.

அனுமதியை மறுத்து முறையாக நடைபெற வேண்டிய அகழாய்வை கெடுத்து தமிழர்களை வஞ்சித்து வந்தது மத்திய அரசு. மீண்டும் அகழாய்வை தொடர வேண்டுமென்று மதுரை உச்சநீதிமன்ற கிளை கூறியுள்ளது.

கீழடியின் முக்கியத்துவம் அனைத்து வகையிலும் நாம் உணர வேண்டும். இங்கு கிடைத்துள்ள 5000க்கும் மேற்பட்ட பொருட்களில் மத அடையாளம் சார்ந்த பொருட்கள் என்று எதையும் சொல்லமுடியாது. மதங்கள் உருவாவதற்கு முன்பே சிறந்து விளங்கிய ஒரு நாகரிகத்தின் அடையாளம்தான் கீழடி.

மொழியியல் அறிஞர் கால்டுவெல், தமிழ் மொழியின் சிறப்பை பற்றி கூறுகிறபோது, தமிழ் மொழி ஒரு சமயச்சார்பற்ற மொழி என்று மதிப்பீடு செய்துள்ளார்.

இந்த மதிப்பீட்டிற்கும் கீழடி நாகரிகத்திற்கும் இருக்கிற ஒற்றுமையை நாம் உணர வேண்டும்.

தேசிய இனங்களின் தனித்துவமான பண்பாட்டின் மீதும் வரலாற்றின் மீதும் ஒரு கொடுந்தாக்குதல் அரங்கேறிக் கொண்டிருக்கும் இந்த காலத்தில் கீழடியில் கிடைத்துள்ள நாகரிகத்தின் எச்சங்களை பாதுகாப்பதும் அங்கு அகழாய்வை முன்னெடுப்பதும் தமிழ்ச் சமூகத்தின் அர்த்தமிக்க வாழ்வியல் வரலாற்றுச் சாரத்தை பாதுகாக்கும் நடவடிக்கையாகும்.

மாறாக கீழடி அகழாய்வை அழிப்பதும் மறைப்பதுமாக தொடர்ந்தால் நமது அடையாளம் இல்லாமலே போகும் இவ்வுலகில், ஒரு சமூகத்தின் வரலாறு என்பது பன்முகத்தன்மை கொண்டது. அது உணர்வெழுச்சியின் அடிப்படையில் எழுதப்படுவது அல்ல, உண்மையான தரவுகளின் அடிப்படையில் எழுத்தப்படுவது. தமிழர்களின் வரலாறு நீண்ட நெடிய பண்பாட்டுக்கு சொந்தமானது.

வரலாறு இல்லாத இனம் வாழ்வதில் அர்த்தம் இல்லை ஒரு நெடும் வரலாறும் உலகத்திற்கே நாகரிகம் பண்பாடு சொல்லி தந்த மூத்த இனம் இப்படி அமைதியாக இருப்பதிலும் அர்த்தம் இல்லை. இதன் அவசியம் உணர்ந்த மக்கள் மாணவர்கள் என அனைவரும் இதை கையில் எடுக்க வேண்டும்.

கீழடி அகழாய்வை அனுமதிக்க மாட்டோம் என்ற முடிவு அரசியல் ரீதியான தந்திரமான முடிவு அதனை அரசியல் களத்தில் தான் சந்திக்க வேண்டும். தமிழக அரசு மற்றும் இதர கட்சிகள் இது குறித்தான கருத்துகளை கலந்து பேசி மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதை செய்வார்களா இவர்கள்? மக்கள் எழுச்சி பெற்றாலே நமக்கான தீர்வு வரும் அனைத்திலும்.

**மனோ குணசேகரன்**
புள்ளவராயன் குடிக்காடு

## மன எழுச்சி

ஒருவனுக்கு ஒரு இடத்தில்
தன் சுய கௌரவத்தையும்
அவன் உணர்வுகளையும் பாதித்தை பற்றி
அவன் யோசிக்கும் போது தான்,

அவன் கௌரவத்தை
இழந்த இடத்தை விட
அவனிடம் இருந்த மன எழுச்சி  தான்
அவன் வெற்றி என்ற இடத்தை நிரப்புகிறது...



**ஜெ.ஜவஹர்**
மன்னார்குடி

# களம் காத்திருக்கிறது


இராசசேகரன் மன்னை

அறவழியில் போராட அனைவரும் வாருங்கள் களம் அமைப்போம்
அதற்கான தடத்தை தீர்மானிப்போம்...

எது போராட்டம்
எதுவும் போராட்டம்
எதிர்ப்பும் போராட்டம்
விழிப்புணர்வும் போராட்டம்
வீதியில் நிற்பதும் போராட்டம்
ஒத்துழையாமையும் போராட்டம்
ஏற்றுக்கொண்டு ஒழுங்குப்படுத்துவதும் போராட்டம்
பேசுவதும் எழுதுவதும் போராட்டம்
கேட்க வைப்பதும் செயல்பட வைப்பதும் போராட்டம்...

பசிக்கின்ற குழந்தையின் அழுகையும் போராட்டம்,
கடக்கின்ற வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் போராட்டம், இறக்கின்ற மனிதன் இறுதி மூச்சை நம்பிக்கையோடு வெளியேற்றுவதும் போராட்டம்.

இன்றைய தமிழகத்தின் நிலை போராடாமல் வாழ்வில்லை என்றாகிவிட்டது. ஆமாம்! அனைத்திலும் சிக்கல், நம்மை அழிக்க ஒரு ஆயுதமில்லை! ஒவ்வொரு பகுதியிலும் ஒரு கோடி ஆயுதங்கள் ஏவப்படுகிறது மொத்த நிலப்பரப்பையும் காவுக் கேட்கிறது. தனது மண்ணை காக்க, வளங்களை காக்க, மொழியை காக்க, ஏன் இயல்பாக வாழ்வதற்கு கூட போராடி தான் ஆக வேண்டும் காரணம் மக்கள் தங்களின் அடிப்படை வசதிகளை கூட தாங்களே நிறைவேற்றிக்கொள்ளும் நிலையில் தான் இருக்கின்றனர்.

உதாரணத்திற்கு உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படவில்லை, நடத்த திராணியும் இல்லை. உள்ளாட்சி என்ற கட்டமைப்பே சிதைந்து கிடக்கிறது. ஆனால் மக்களின் இயல்பு வாழ்க்கை எந்த மாற்றமுமின்றி நகர்கின்றது. இதற்கு காரணம் இந்த உள்ளாட்சி அமைப்பால் அதன் பிரதிநிதிகளால் மக்களுக்கு எந்த பலனும் இல்லை, அது இல்லாமலே மக்கள் வாழ பழகிவிட்டனர், வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இது எவ்வளவு பெரிய கேவலம்???

இங்கே அரசாங்கம் தனியாகவும், சனநாயக தூண்கள் தனியாகவும், மக்கள் தனியாகவும் தான் வாழ்கின்றனர். ஒரே நிலப்பரப்பில் இவர்கள் வாழ்வதால் மட்டுமே இது ஒரு தேசமாக இருக்கிறது. மற்றப்படி இந்த சனநாயக கட்டமைப்பை கடந்து என் பிழைப்பை நான் பார்த்தால் எனது குடும்பம் வாழும் என்ற மனநிலையிலேயே மக்கள் உள்ளனர்.

அனைத்து வளங்களும் உள்ள தமிழ்நாட்டை மொழிவாரி மாநிலம் பிறக்கும் போதே கடிவாளம் போடுவதை போல அனைத்து நீர் பிடிப்பு பகுதிகளையும் அண்டை மாநிலங்களுக்கு தாரைவார்த்துவிட்டனர். அன்று நடந்த போராட்டங்களையும் வலுவிழக்க செய்யுமளவிற்கே இங்கே அரசியல் ஆளுமைகள் இருந்தன.

அதன் பிறகு இந்தி எதிர்ப்பு போராட்டம் வலுவாக நடந்த பொழுது கூட அதை தமிழ் காப்பு போராட்டமாக மாறாமல் ஆங்கில வளர்ப்பு போராட்டமாக மாற்றியதோடு இனியொரு போராட்டம் இது போன்று தலையெடுக்காமல் இருக்கும் அளவிற்கு சமுதாய மழுங்கடிப்புகளை பலப்படுத்தி போராட்ட குணமே மக்கள் மனதில் எழாத வகையில் மடைமாற்றி விழிப்புணர்வு தளத்தையே சிதைத்து விட்டனர்.

பிறகு தங்கள் அரசியல் வசதிக்காக நடுநிலையாக இருக்க வேண்டிய ஊடகங்கள், கட்சிகளின் கொள்கை பிரச்சாரத்திற்கானது என்றும், இதுதான் இயல்பு என்றும் மக்களின் மனநிலையையே மாற்றிவிட்டனர்.

இதன் விளைவாக உரிமைகளை இழந்து இலவசங்களுக்கும், சலுகைகளுக்கும், மானியங்களுக்கும் கையேந்துவதே வாழ்க்கை என்றாகி விட்டது. இதிலிருந்து விடுபட போராட்டம் ஒன்றே தீர்வு.

அனைத்தையும் இழக்கும் நிலையில் 2009 ஈழப்படுகொலை அனைவரையும் சற்று சிந்திக்க வைத்தது. அதன் பிறகே பல கேள்விகளுக்கான பதில்கள், போராட்ட வடிவங்கள் என பரிணாமம் மாற செய்தது.

கூடங்குளம் அணுவுலைக்கெதிரான தொடர் போராட்டம், இடிந்தகரை மக்களால் 1300 நாட்களை கடந்து இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் புரிந்து இணைந்தால் போராட்டம் தொடரும் என்ற செய்தியை இது தெளிவுப்படுத்தியது.

அடுத்து கெயில் குழாய் பதிப்பிற்கு எதிரான போராட்டத்தின் தீர்வு நீதிமன்றங்களில் இல்லை வீதியில் தான் இருக்கிறது என்பதை உணர்த்தியது.

மீத்தேன் போராட்டக்களம் ஐயா நம்மாழ்வாரின் வழியில் பரவலான வெகுசன மக்களை சென்றடைந்த விழிப்புணர்வுடன் கூடிய போராட்டமே தீர்வு என்பதை உணர்த்தி போராட்டத்தின் மீதான நம்பிக்கையையும் விழிப்புணர்வின் அவசியத்தையும் மனதில் பசுமரத்து ஆணியாக பதியச் செய்தது.

இதில் நாம் ஒன்றை கவனிக்க வேண்டியுள்ளது ஆளுங்கட்சி மற்றும் அதிகாரிகளின் தவறுகளே மக்களை போராட வேண்டிய நிலைக்கு தள்ளுகிறது. ஆளுங்கட்சியின் தவறை ஒழுங்குப்படுத்த தேவைப்பட்டால் எதிர்த்து நின்று மக்களை அதிலிருந்து காக்கவே அரசியலமைப்பு சட்டத்தில் எதிர்கட்சி என்ற ஆளுங்கட்சிக்கு நிகரான அதிகாரம் கொண்ட அமைப்பு இருக்கிறது. ஆனால் நம்மை பொறுத்தவரை ஆக்கப்பூர்வமான எதிர்கட்சிகள் இருக்கிறதா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். எதிர்கட்சிகள் எதிரிகட்சிகளாகி மக்களை இருவேறு கூறுகளாக பிரித்து வைத்திருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால் மக்கள் சாதியாக பிரிந்திருப்பதை விட, மதமாக பிரிந்திருப்பதை விட இன்னும் பல காரணிகளால் பிரிந்திருப்பதாக தெரிந்தாலும் உண்மையில் இந்த இருக்கட்சிகளும் உருவாக்குகின்ற பொது கருத்தியலால் தான் பெரிய அளவில் பிரிந்து கிடக்கின்றனர். மேற்கூறிய காரணிகள் அனைத்தும் இந்த பிரிவிற்கு பலம் சேர்க்கும் கருவியே தவிர கருவல்ல.

இந்த சாதிய மத காரணிகள் நம்மை பிரித்தாளவில்லை என்பதையே சமீபத்திய சென்னை மற்றும் கடலூர் பகுதி வெள்ள மீட்பு பணிகளும் சல்லிக்கட்டிற்காக தமிழர்கடலில் நடந்த தைப்புரட்சியும் அதனை தொடர்ந்து மதுரை கோவை என தமிழர்நாடெங்கும் தமிழர் என்ற ஓர்மையில் மக்கள் வீதியில் அமர்ந்து அறப்போராட்டம் நடத்தியதும் காட்டுகின்றது.

போன வருடம் இந்தியாவில் நடந்த மொத்த போராட்டங்களில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான போராட்டம் தமிழ்நாட்டில் மட்டுமே நடந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றது. இந்த ஆண்டு கேட்கவே வேண்டாம்! தைப்புரட்சி தொடங்கி காவிரித்தாய் மீட்பு, நெடுவாசல், கதிராமங்கலம் தொடர்ந்து இன்றைய மருத்துவர் அனிதாவின் மரணம் ஏற்படுத்திய எழுச்சி நீட்டையும் நீட்டிற்கு காரணமான அனைத்து கட்சிகளையும் ஓட ஓட விரட்டுகிற வகையில் போராட்டம் இல்லாத நாட்களே இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

இருந்தும் போராட்டங்கள் அனைத்தும் முழுமை பெற்றதா எனில் இல்லை, சிறு முன்னேற்றமும் தற்காப்பும் மட்டுமே அடைந்துள்ளோம் என்றே கூறவேண்டும். தமிழருக்கான தன்னுரிமை அதிகாரம் அமையாமல் இப்போராட்டங்கள் முழுமை பெறாது.

இதிலென்ன சிக்கல் என்றால் இங்கே அனைத்து கட்டமைப்புகளும் சரியாகவே உள்ளது. ஆனால் நடைமுறைபடுத்துவதிலே சிக்கல் ஏற்படுகிறது. இதற்கு ஆளுங்கட்சி முக்கிய காரணமாக இருந்தாலும் எதிர்கட்சி செயல்படாததே பிரச்சனையாக கருத வேண்டியுள்ளது. ஆளுங்கட்சி என்றாலே அனைத்தையும் சுரண்டும் அதிகாரம் கொண்டவர்கள் என்றாகிவிட்டது.

இதற்கெல்லாம் என்ன தான் தீர்வென்று சிந்தித்தால் ஒரே தீர்வு தான். மக்கள் சரியானவர்களை தேர்ந்தெடுக்க ஒழுங்கான முறையில் ஆட்சி நடக்க மக்களுக்கு விழிப்புணர்வு தேவை. அதற்கு ஊருக்கு ஊர் இளைஞர்கள், மாணவர்கள், ஓய்வுப்பெற்ற அரசு அதிகாரிகள், பெண்கள் என்று ஐநூறு பேரை ஒருங்கிணைத்த மக்கள் இயக்கம் உருவாக வேண்டும்.

இந்த இயக்கம் அனைத்து பிரச்சனைகளையும் அரசின் அனைத்து நகர்வுகளையும் ஆழமாக அனைத்து கோணங்களிலும் விவாதிக்க வேண்டும். அதன் சாதக பாதகங்களை மக்களிடத்தில் கொண்டு சேர்த்து அதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

குறிப்பாக மக்கள், அரசியல் கட்சிகளை தவிர்த்த அரசியலை பேசவேண்டும். அரசின் நன்மைகளை ஏற்க வேண்டும், ஆனால் பாராட்டுவது அவர்களின் வேலையல்ல. அதே நேரத்தில் அரசின் தவறுகளை தெளிவாக மக்கள் மன்றத்தில் எடுத்துவைத்து ஆள்பவர்களை, அதிகாரிகளை வாய்ப்பு கிடைக்கும் இடத்திலெல்லாம் கண்ணியமாக கேள்வி கேட்கும் வகையில் தயார்படுத்த வேண்டும்.

அதாவது ஊருக்கு ஊர் நிரந்தர எதிர்கட்சிகள் உருவாக வேண்டும். அவர்கள் அதன் கொள்கையை கோட்பாடுகளை கடந்து வந்த பாதைகளை செய்த தவறுகளை என அனைத்தையும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்.

இதற்கு சமுதாயத்தில் இருக்கும் அனைவரும் அவரவர் தளத்தில் அதற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் அதாவது வெளிநாட்டில் மற்றும் வெளியூர்களில் வேலை பார்ப்பவர்களால் களத்திற்கு வர இயலாது.

ஆகவே அவர்கள் பொருளாதார பங்களிப்பை செலுத்தலாம். அதோடு சமூக வலைத்தளங்கள் மூலம் அனைத்து விழிப்புணர்வு தகவல்களையும் பகிர வேண்டும்.

உள்ளூரில் இருப்பவர்கள் சரியான களம் அமைத்து தமிழர் அறத்தின் வழி நின்று மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் குறிப்பாக அனைத்து கருத்துகளும் நேர்மறை கருத்துகளாகவே பேச, எழுத பழக வேண்டும்.

இந்த போராட்டக்களமானது சமூக வலைதளம், பொருளாதார பலம், ஏற்றத்தாழ்வை துறந்த சமரசமற்ற செயல்பாட்டாளர்கள் என அனைவரையும் ஒருங்கிணைத்து எதனாலும் எதுவும் தடைபடாதவாறு அவரவர் தளங்களில் அவரவர் செயல்படும் வகையில் கட்டமைக்கப்பட வேண்டும்.

தெளிவாக கூற வேண்டும் எனில் நம்மை பிரித்து வைத்திருப்பவர்களுக்கு மக்கள் கொடுக்கின்ற குறைந்தபட்ச ஆதரவே அவர்களை எதுவும் செய்யலாம் என்ற நம்பிக்கையை கொடுக்கிறது. முதலில் அதனை உடைத்து நம்பகத்தன்மை அற்ற அரசியல் களத்தை உருவாக்க வேண்டும்.

நமது அரசியல் நிலைபாடு சரியாக இருந்தால் தான் மக்கள் நம்மை ஏற்பார்கள் என்ற நிலை உருவாக உழைக்க வேண்டும்.

இதற்கு எங்கெல்லாம் பேச முடியுமோ அங்கெல்லாம் பேச வேண்டும். எங்கெல்லாம் எழுத முடியுமோ அங்கெல்லாம் எழுத வேண்டும். எங்கெல்லாம் போராட முடியுமோ அங்கெல்லாம் போராட வேண்டும்.

அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்த வேண்டும். வாய்ப்பு கிடைக்கவில்லை என்றாலும் உருவாக்க வேண்டும் ஐநூறு பேர் இருந்தால் இது சாத்தியமா! என்று தோன்றலாம். சத்தியமாக சாத்தியமே.

ஐநூறு என்பது ஐநூறு ஓட்டு, ஐநூறு குடும்பங்களின் ஓட்டு அதாவது குடும்பத்திற்கு நான்கு ஓட்டு என்று கொண்டால் கூட இரண்டாயிரம் ஓட்டு. அதுபோக ஐநூறு பேரும் ஐந்து வருடத்தில் ஒருவருக்கு குறைந்தபட்சம் இருபது பேரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினால் பத்தாயிரம் ஓட்டு எந்த தொகுதியாக இருந்தாலும் இந்த பத்தாயிரம் பேர் தான் வெற்றியை தீர்மானிப்பவர்கள். அவர்களை ஒழுங்குபடுத்தினால் போதும். மக்களாட்சி தானாக நடக்கும், நடந்தாக வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இதில் பல கருத்து முரண்பாடுகள், கொள்கை வேறுபாடுகள், கருத்தியல் குளறுபடிகள் ஏற்படலாம். ஆனால் நாம் எந்த நோக்கத்தில் இணைந்தோமோ அந்த நோக்கத்திற்கான பயணத்தில் நாம் முன்னேறுகின்ற பாதையை அமைத்து கொள்ள வேண்டும்.

அதாவது நாம் நமது சந்ததிகளுக்கு தேவையான தன்னிறைவு பெற்ற தேசத்தை சிற்பமாக செதுக்க முயல்கின்றோம் அந்த நேரத்தில் நமது கவனம் முழுவதும் சிற்பத்தின் நேர்த்தியிலேயே இருக்க வேண்டுமே தவிர உடைந்து விழிகின்ற துகள்களில் இருக்க கூடாது. அப்படி துகள்களை கவனித்தால் சிற்பம் சிதைந்து விடும்.

ஆகவே சிற்பத்தை செதுக்கி முடிக்க எந்த வகையில் உழைக்க வேண்டுமோ அனைத்து வழிகளிலும் உழைத்தாலே போதும், மாற்றம் கண் முன்னே.

பல நூற்றாண்டுகளாக எந்த ஒரு தலைவனும் இல்லாமல், ஒரு இனம் தனது அடையாளங்களை முடிந்தவரை பாதுகாத்து வருகிறது என்றால் அது நம் தமிழினம் தான். காரணம் நம்மிடம் இருக்கும் போராட்ட குணம். அது ஒன்றே நமக்கான தீர்வை பெற்று தந்துள்ளது. இனியும் பெற்று தரும், நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் இது சாத்தியமே.

**இராசசேகரன்**
**மன்னை**

## G.T. மகேஷ்



அன்பு காட்ட அன்னை இருந்தும்
ஆதரவு அளிக்க தந்தை இருந்தும்
இல்லறம் புரிய மனைவி இருந்தும்
ஈகைக்கு தமையன் இருந்தும்
உதிரம் போல் தமக்கை இருந்தும்
ஊக்கம் கொடுக்க நண்பர்கள் இருந்தும்
எழில் கொஞ்சும் சேய் இருந்தும்
ஏறு போல் நான் உழைக்கிறேன்
ஐயம் கொண்ட வாழ்வுடன் அயல் நாட்டில்
ஒற்றை காகிதமான பணத்திற்காக
ஓவியமான என் வாழ்வை தொலைக்கிறேன்
ஔடதம் இல்லை என் காயங்களுக்கு

# எங்க ஊரு ''கடகடத்த கட்டழகி ஒன்னா நம்பர்'' எனும் ரதம்...

1991'வரை தஞ்சை மாவட்டமாக இருந்த எங்க கிராமம், அதன் பிறகு திருவாரூர் மாவட்டமாக மாற்றப்பட்டது. எடங்கான்கோட்டை என்ற கிராமத்தின் பெயர் காலப்போக்கில் மருவி இன்று எட-மேலையூர் என உள்ளது. மன்னை-தஞ்சை நெடுஞ்சாலையிலிருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் உள்ளடங்கிய பசுமை சூழப்பட்ட பெரிய கிராமம்.

எனது பால்ய காலத்தின் போது சில வருடங்கள் என் கிராமத்திலிருந்து ராஜ மன்னார்குடி எனும் டவுனில் உள்ள எனது பள்ளிக்கு பேருந்தில் செல்ல வேண்டியிருந்தது. எங்கள் கிராமத்திற்கு ஒரே ஒரு பழைய பேருந்து வருவது மட்டுமே வழக்கம். இன்றும் அப்படித் தான். எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அதே நிலைமையில் தான் இன்றுவரை மன்னைக்கும் மேலையூருக்கும் ஊர்ந்து செல்கிறது. எனது தாயார் பிறந்த ஊர் செருமங்கலமும் இது செல்லும் வழியில் அமைந்ததே எனக்கு கிடைத்த கூடுதல் ஆனந்தம். அரசாங்கம் பல வண்டிகளை மாற்றினாலும், எங்க வண்டியின் வயது எப்போதுமே எண்பது தான். அதில் பயணித்தவர்களுக்கு மட்டுமே தெரியும், அவளின் முதுமை அழகை பற்றி.

இரண்டு ஊர்களுக்கும் இடையில் சுமார் 12முதல் 16 கிலோ மீட்டர்கள் மட்டுமே இருந்தாலும் அசைந்து ஆடி செல்ல முக்கால் மணி நேரம் ஆகும் அவளுக்கு, ரதம் மாதிரி. அதான் அதுல உள்ள சொகமே.

வண்டியில் இருபக்கமும் இரண்டு பேர் அமரக்கூடிய இருக்கைகள் மட்டுமே உண்டு. ஆகையால் நடுவில் அகலமாக இடவசதி இருக்கும், நிறைய பேர் நின்று செல்ல ஏதுவாக இருக்கும். தானிய மூட்டைகள் போன்ற பெரும் சாமான்ங்களை எடுத்து செல்ல கிராமவாசிகளுக்கு ஏற்றார்போல வடிவமைக்கப்பட்டிருக்கும்.

ஓட்டுனர் வண்டிய ஸ்டார்ட் பண்ணா போதும், கடகடகடகட...ன்னு ஒரு நடுக்கம் பேருந்து முழுக்க சீரா பரவும். அங்கங்க ஒட்டப்பட்ட கம்பிகளோட பேருந்தே நரம்பு தளர்ச்சி வந்த மாதிரி நடுங்க ஆரம்பிக்கும். அதன் சப்தத்தால் ஒரு கிலோமீட்டர் தூரம் வரைக்கும் காற்றில் கடிதம் எழுதி தன்னோட வருகையத் தெரிவிக்கும், ஊரு மக்களுக்கு.

இருக்கைகள் தோள்பட்டை வரைக்குந்தான், தலய சாச்சா கம்பி தான். அதனால ரெகசிய குசுகுசு...பேச்சுக்கே இங்க இடமில்ல. எல்லாரும் வெட்ட வெளிச்சமா எல்லாருக்கும் தெள்ளத்தெளிவா தெரிவாங்க. கடங்காரங்க மட்டும் ஒழிய இடமில்லாம தலையில துண்டபோட்ட மாதிரி பதுங்குவாங்க. அங்கங்க கெழவன் கெழவீன்னு வாய் நெரைய வெத்தலய போட்டு, பொக்கவாயோட அரட்டையடிச்சு பேருந்தையே அலங்கரிப்பாங்க.

வண்டிக்குள்ள நல்ல காற்றோட்ட வசதி, ஏன்னா எந்த ஜன்னலிலும் கண்ணாடி வசதியே கிடையாது. மழை நாட்களில் இருக்கையில் அமர்வது கடினம் தான். சில நேரங்கள் பேருந்தின் உட்புறமும் சொட்டு நீர் பாசனமாய் மழை ஆங்காங்கே பயணிகளின் தலையில்

அபிஷேகம் செய்யும். பேருந்துக்குள்ள குடைய விருச்சத மட்டும் நான் இன்னும் பாத்ததில்ல. ஆனா இயற்கை விரும்பிகளுக்கு, அதுவும் வரமே.

நம்ப அழகி செல்லும் வழியில் உள்ள அனைத்து கிராமத்து பள்ளி மாணவர்களும், பஸ் பாஸ் வசதியோடு சொந்த வண்டியில் பயணிப்பது போல இலவசமாக பேருந்து முழுக்க ததும்ப ததும்ப படிக்கட்டுவரை தொங்கிக்கொண்டு அதகளத்தோட, ஒருபக்கமா பேருந்த சாய்த்தபடி பயணிப்பது வழக்கம். கேலி கிண்டல்களுடன், அந்த படிகட்டையும் நம்பி நாங்க தொங்கியபடி பவனி வந்த நாட்களை நினைத்தால் இன்றும் அடி தொண்டையில் ஒரு இனிப்பு இருக்கத்தான் செய்யுது.

அந்த வழியில் செல்லும் ''ராஜ கோபாலசாமி'' எனும் தனியார் பேருந்து படு வேகமாக செல்வது வழக்கம். எல்லா வண்டிக்களுக்கும் வழிவிட்டு செல்லும் பெருந்தன்மை நம் அழகிக்கு எப்போதுமே உண்டு (எப்புடி..). ஆனா, ஒரு நாள் ராஜ கோபாலசாமி நம் அழகியை தாண்டவும் பேருந்தில் இருந்த பள்ளி மாணவர்கள் ''அண்ணா அந்த வண்டிய இன்னக்கி மட்டும் சைடு போட்டே ஆகனும்...'' ''ஆமா...விடாதீங்க...விடாதீங்க...''னு பசங்க பொண்ணுங்க பலரும் சட்டென ஆரவாரமாக கொக்கரிக்க தொடங்கினர். ஓட்டுநரும் நடத்துனரும் சிரித்தபடி உற்சாகத்தில் திளைத்தனர். யாரும் எதிர்பாக்காத அளவுக்கு வெறிகொண்டவள் போல அப்பேருந்தை ஓரங்கட்டி முந்திச் சென்றாள் நம்ப கெழட்டு அழகி ''அந்த பஸ்ச சைடு வாங்கும் போது நரம்பு பொடைக்க எட்டாவது படிக்கிறப்ப போட்ட சத்தம் இன்னும் கேக்குது எனக்கு.''

இடைப்பட்ட அனைத்து சிற்றூர்களிலும் உள்ள பயணிகளை ஏமாற்றாமல் சுமந்துக்கொண்டு தள்ளாடிச் செல்வாள். ''அப்பப்ப நட்டு போல்ட்ட வேணா கெழட்டிவிடுவாளத் தவிர பயணியகள ஒருபோதும் கெழட்டிவிட்டு நான் இன்னும் பாத்ததில்ல...உத்தமிப்பா அவ...''.

எங்க ஊரு மக்களுக்கு மட்டுமல்ல, வழியில் உள்ள எல்லா ஊருக்கும் இவதான் வயதான தோழி. ஆம், வழியில் உள்ள ஊர்களிலும்கூட பல முதியவர்கள், வேரு எந்த பேருந்து வந்தாலும் ஏறமாட்டாங்க, நம்ப கடகடத்த கட்டழகி மேல அப்படி ஒரு காதல் அவங்களுக்கு. பல நாள் இரவு கடேசி ட்ரிப்புக்கு ஆளே இல்லன்னாலும் ஓட்டுநனரையும் நடத்துனரையும் மட்டுமே சுமந்துக்கிட்டு அவ தனிமையா இருட்டுக்குள்ள ரோட்ட தடவி தடவி போவதை பாத்தா பாவமா தான் இருக்கும். ''உன் கடம உணர்ச்சிக்கு ஒரு அளவே இல்லயா கிழவி...''ன்னு மண்டைக்குள்ள வந்து போகும்.

யார் எங்கு கைகாட்டி நிறுத்தினாலும் நம் சொந்த வண்டி போல நன்றியோட வாலாட்டாம நிற்பாள், பிரேக் போட்ட இடத்துலேந்து சற்று தள்ளி; ஏன்னா பிரேக் கன்டிஷன் அப்படி.

இப்படி பல தகுதி பாத்துதான் அரசாங்கம் நம்பர் ஒன்ன நம்ப அழகிக்கு கொடுத்ததோ என்னவோ...!!

எனக்கு ஆறு வயசு இருக்கப்போ, நடுரோட்டுல என் குடும்பத்தோட நின்னபடி, நான் என் ஆத்தா தோல்பட்டை மேல நின்னுகிட்டு மழலை சிரிப்போட கைக்காட்டி என் அப்பாவ மட்டும் வடமாநிலத்துக்கு கடேசியா அனுப்பிவச்ச கனத்த அனுபவங்களும் எனக்கு அவளோட உண்டு. அழச்சுட்டு போனவ தான்.,வருசம் 21'ஆச்சு இன்னும் அவர திரும்ப

அழச்சிட்டு வரல அவ. எல்லா வாகனமும் ஒரு நாளு ஏதாச்சும் ஒருவகையில எமனுக்கு ஏஜென்ட்டு வேல பாக்கத்தான் செய்யுதுங்க.

மன்னார்குடி, செருமங்கலம், எட–மேலையூர் இந்த மூனு ஊரும் எனக்கு பழக்கம் என்பதால் அதுல பயணிக்கிறப்பெல்லாம்…

‘‘என்னா மாப்புள ஊருலேந்து எப்ப வந்தீங்க… வாங்க இங்க ஒக்காருங்க…‘‘
‘‘தங்கச்சிக்கு இப்ப எப்படி இருக்கு உடம்பு…‘‘

‘‘ஏன்ய்யா வீரமணி மொவனா நீயீ எனக்கு நல்லா பழக்கம்ய்யா உங்கப்பா… நல்ல மனுசன் தான் விதி சனிய யார விடுது நல்ல படிச்சுக்கப்பா அப்பாமாரி…‘‘

‘‘அம்மா., நம்ம ஊருல தான டீச்சரா வேலபாக்குது…‘‘

இப்படி பல விசாரிப்பு நடக்கும். பத்தாததுக்கு அப்பேருந்தின் நடத்துனரும் எனது நண்பனின் அப்பா என்பதால் ‘‘எப்டி இருக்கப்பா… நல்லா இருக்கியா…ரொம்ப நாளா இந்த பக்கம் ஆளயே காணும்… நம்ம பய சென்னையில தான் இருக்கான்…‘‘னு விசாரிப்பாங்க.

இதுபோன்ற அக்கறையும் அன்பும் ததும்புற உரையாடல்கள் எந்த பயணத்திலும் கிடைக்காத இன்பம் தான். சொந்தக்காரங்க வீட்டுக்குள்ள போற மாதிரி ஒரு உணர்வுன்னு சொல்லலாம். ‘‘எங்க கிராமத்துக்கே பஸ்ஸூ வடிவம் கொடுத்த மாதிரி இங்குட்டும் அங்குட்டும் ரோட்டுல ஒரு ஓரமா கம்பு ஊனாத கொறையா ஆடி ஆடி உருண்டு தான் போவா அவ…‘‘

எப்ப அவள பாத்தாலும் சிறு வயசுலேந்து அவளோட நடந்த அனைத்து அனுபவங்களும் சட்டென வந்து செல்லமா தலைய கலச்சிட்டு போகும்.

மழைக் காலங்களில் மாலை நேரத்துல இருண்ட மேகம் வானை மூடி, வழியெங்கும் விவசாய நிலத்துல நெற்கதிரெல்லாம் கூட்டங் கூட்டமா தலை கணத்து தென்றலுக்கு நாட்டியம் ஆடுங்க. அப்போ, ஜன்னலின் அருகில் அமர்ந்துகிட்டு தொலைவில் கூட்டமா பறக்கும் கொக்கு குருவிங்கள பாத்துகிட்டு, காத்தாட நிம்மதி பெருமூச்சுவிட்டபடி, அந்த ஈரக் காத்த மொகத்துல மோதவிட்டு காரணந்தெரியாத சின்ன சிரிப்போட, அவ அரவணைப்புல சொந்த ஊர நோக்கிப்போற சொகமே தனி அலாதி தான்.

**விக்னேஷ் பாபு**

என்னடா இது நாடு?
என்னடா இது தேசம்?

அன்றாடமே அவமானம்
அத்தியாவசியமே அலங்கோலம்.....

திரும்பிய பக்கமெல்லாம் போராட்டம்
திசையெங்கும் மரண ஓலம்.....

ஆடிப்பட்டம் கட்டிய பூமியிலே
ஆணவக்காற்று வீசுதடா!
விதைச்சவன் நிலத்திலே
விலைமதிப்பில்லா பிணங்கள் தொங்குதடா!

நகரத்தின் நாற்றங்கள்
கிராமத்தின் சாபங்களாக மாறுவதென்ன...
பச்சைநிற கூந்தல் விரிந்த பூமியிலே
மரண பருக்கைகளை அள்ளிய சோகமென்ன!

படைத்தவனே கண்கலங்க,
பாமரனும் உயிர் துறக்க,
எல்லை மீறி போனதடா
ஏகாதிபத்திய சர்க்காரும்!

மண்ணை
ஆண்டவனும் பார்க்கவில்லை - படைத்த
ஆண்டவனும் பார்க்கவில்லை,
மனிதகுலம் மடிவதென்ன
மானங்கெட்ட பூமியிலே!

யார் பிழைக்க அவகாசம்
எந்த நொடி மரணம் வேண்டும் - இப்படி
சட்டங்களும், திட்டங்களும்
மக்கள் மீது பாய்வதென்ன!
மண்டியிட்டு மாய்வதென்ன!

நீதியெல்லாம் செத்துடுச்சே
நெஞ்சமெல்லாம் வெந்துடுச்சே!

என்னடா நாடு இது?
என்னடா தேசம் இது?

**- பழனிவேல் ஆறுமுகம்**

# நிலவு

அம்மா ஊட்டிய சோற்றின்
அடையாளம்
அலைகடல் தாண்டியும்
அழியாமல் அப்படியே

என்னவளின் அழகை
எள்ளளவும் மாறாமல்
எடுத்துக்கூறும் கவிதை

உறவுகளைப்
பிரிந்த நாளில் எனக்கு
பிரியாத நண்பன்

மின்னொளி போன நாட்களில்
பால்ஒளி வீசும் பௌர்ணமியில்
பந்து விளையாடிய
பால்ய நாட்களை
நினைவுப்படுத்தும் சின்னம்

வளர்பிறையும் தேய்பிறையும்
வாழ்க்கை என்று மனத்திரை
விலக்கும் ஞாநி
நதியோடும் கடலோடும்
மலையோடும் மரமோடும்
மேககூட்டங்களிடையே
ஒளிந்தோடி விளையாடி
தேய்ந்தபோதும் தேயாது உன் அழகு

**பாபு (எ) மணிகண்டன்**
மன்னார்குடி

# எதைப்பற்றி எழுத.?



பாலாஜி சுதந்திரராஜன்
மன்னார்குடி

நாம் உயிர் வாழ உழவு செய்து உணவளிக்கும் உழவன் இன்று தன்னுயிர் மாய்த்துக் கொள்ளும் நிலையை எழுதவா.?

உயிருக்கும் மேலான மானத்தை இழந்தும் நமக்காக போராடும் உழவனை நாம் கண்டுக்கொள்ளாது இருக்கும் அவலத்தைப் பற்றி எழுதவா.?

அன்று ஊருக்கே உணவளிக்க ஏர்பூட்டிய கைகள் இன்று தன் வயிற்றை நிரப்ப கடவுச்சீட்டுடன் ஏர்போர்டில் நிற்பதை எழுதவா.?

கதிராமங்கலத்தின் கதறல் கேட்டும் கரையாதிருக்கும் நம் கல்லான நெஞ்சத்தைப் பற்றி எழுதவா.?

அனைத்து வளங்களும் கிடைக்கப்பெற்று சீரான வாழ்க்கை வாழ்ந்த நாம். மீத்தேன் திட்டத்தால் வேறு இடத்திற்கு அகதிகளாக செல்ல போவதை பற்றி எழுதவா.?

அன்று ஆற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடிய காவிரியில் இன்று மக்களின் கண்ணீர் வெள்ளம் நிரம்புவதை எழுதவா.?

அன்று சோழன் ஆண்ட சோலைவனம் இன்று பாலைவனம் ஆவதை எழுதவா.?

அடுப்படி சிலிண்டரின் ஆபத்து தெரிந்த நமக்கு அணு உலையின் ஆபத்து தெரியாமல் இருப்பதை எழுதவா.?

நியூட்ரினோ திட்டத்திற்கும் அணுஉலைக்கும் இருக்கும் மறைமுக தொடர்பு பற்றி எழுதவா.?

ஏற்ற இறக்கதுடன் இருந்த பெட்ரோல் விலை, கடந்த சில நாட்களாக ஏற்றத்திலேயே வைத்திருக்கும் பெருமுதலைகளின் தந்திரத்தை பற்றி எழுதவா.?

நமது சுதந்திரம் பறிக்கப்பட்டும் நாம் சுதந்திரதினம் கொண்டாடுவதை பற்றி எழுதவா.?

தமிழக தலைநகரமும் பல்வேறு துறைகளில் தலைசிறந்தவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கும் சென்னையில் ஒரு நாள் மழை பெய்தால் ஏற்படும் அவலத்தை பற்றி எழுதவா.?

பணக்காரனுக்கு தான் இந்த உலகம் என்று புலம்பும் நாம் சாலையோர கடைகளைத் தவிர்த்து பேரங்காடியில் பொருள் வாங்கும் நியாயத்தை எழுதவா.?

சமூக சேவை செய்பவர்களெல்லாம் வேலை வெட்டி இல்லாதவர்கள் என்று பேசும் உள்ளங்களை பற்றி எழுதவா.?

அதில் ஏற்படும் இன்னல்களை பற்றி எழுதவா.?

நன்னெறிகளை ஊட்டி வளர்த்த தாய் தந்தையரைப் பற்றி எழுதவா.?

சூழ்நிலையால் தொலைந்த என் கனவுகள் பற்றி எழுதவா.?

தொலைந்ததும் வீழ்ந்த என்னை தூக்கி நிறுத்திய நட்பைப் பற்றி எழுதவா.?

தனித்து நின்ற எனக்கு தன்னம்பிக்கை கொடுத்த சொந்தங்களைப் பற்றி எழுதவா.?

அகத்தை அழகாக்கிய காதலைப் பற்றி எழுதவா.?

கவி பாட வைக்கும் கண்களைப் பற்றி எழுதவா.?

சமூக சிந்தனையை வளர்த்த மன்னையின் மைந்தர்களைப் பற்றி எழுதவா.?

நமது படைப்புகளுக்கு திறந்த கதவாக இருக்கும் திறவுகோலைப் பற்றி எழுதவா.?

இவைகளை பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் நாம் தான் படித்த உடன் மறந்துவிடுவோமே. இருந்தாலும் தொடர்ந்து எழுதுவேன், அடுத்தடுத்து வரும் திறவுகோல் மின்னிதழில்.

**பாலாஜி சுதந்திரராஜன்**

## மகள்

**செ. சுமதி**

மலையளவு துன்பத்தைக் கூட
திணையளவும்
பொருட்படுத்தாத நீ

என் கண்களில் நீரை கண்டால்
உடைந்து போவது ஏனோ?

# அம்மா

என் அன்னையே
எங்களின் அகிலமே...
என்னை பத்துமாதம்
கருவில் சுமந்த
கண்மணியே....

என்னை தவம்
இருந்து பெற்றெடுத்த
தங்கமகளே...!

வெயிலிலும் மழையிலும்
என்னை பாடுபட்டு
வளர்த்த பைங்கிளியே...

என்னை
விரல் பிடித்து நடக்க வைத்த
வீரமங்கையே...

விழுந்த போதெல்லாம் தட்டிக் கொடுத்து,
அக்கறையாய் அரவணைத்து
பசிக்கும்போதெல்லாம்
பாலூட்டி
பசியாற்றிய
பௌர்ணமியே..

அடுத்த பிறவியிலும்
உன் மகனாய்
பிறக்க வரம் வேண்டுமடி
என்னவளே....

என்றென்றும்
உன் பொற்பாதம்
தொட்டு வணங்கி
மகிழ்கின்றேன்
தாயே....

S.S. கார்த்திக், DME
உள்ளிக்கோட்டை



பிரியதர்சனி
பத்தாம் வகுப்பு மார்சினா மேல்நிலைப் பள்ளி
பள்ளவராயன் பேட்டை

## கவிதை

மனசுக்கும் எழுதுகோல் மைக்கும்
வந்த சண்டையால் ஏற்பட்ட
விளைவு தானோ கவிதை

- S. அபிநயா

# பாம்புப் புற்றும், தேசப் பற்றும்



மன்னை ராம்

இந்த தலைப்பை படித்தவுடனே, எதை பற்றி இந்த கட்டுரை என நீங்கள் யூகிக்க முடிந்தால் நீங்களும் ஒரு தேச விரோதி. இன்னும் புரியும் படி சொல்லனும் என்றால் Anti - Indian.

தமிழ்நாடு மக்கள் நலன் சார்ந்து பேசும், ஏன் சிந்திப்பவர்கள் எல்லாரும் இந்திய ஒன்றிய அரசால் தேச விரோதி என முத்திரை குத்தபடுபவர்கள் தானே.

சரி தலைப்புக்கு வருவோம், பாம்புப் புற்று கட்டுமா என்றால் இல்லை!
கரையான் நல்ல தேர்ந்த மண்ணை சுமந்து வந்து தன் உமிழ்நீரை மண்ணுடன் கலந்து இம்மி இம்மியாய் கட்டிய வீடுதான் புற்று. அதில் வந்து புகுந்து கொள்கிறது பாம்பு, கரையானின் உழைப்பை அழகாய் அபகரிப்பது மட்டுமல்லாமல் அந்த கரையான்களையே தன் உணவாக்கி கொள்கிறது வஞ்சக பாம்புகள். அதற்கு பெயரும் பாம்புப் புற்றாகி விடுகிறது.

தேசப்பற்றும் அப்படிதான், நாட்டின் நலனில் அக்கறை உள்ளவர்கள், படித்த வேலையில்லாதவர்கள், அதிகமாக வருமானம் இல்லாதவர்கள் என பலர் முப்படைகளில் வேலைக்கு சேர்ந்து எல்லைகளை பாதுகாத்து வருகிறார்கள். ஆனால் தேசப்பற்று பற்றி வாய்கிழிய பேசும் அரசியல்வாதிகள் மற்றும் அதன் கட்சி உறுப்பினர்கள் யாரும் எல்லைக்கு சென்று நிற்பது இல்லை.

எல்லையில் ஒருவர் இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு ஏற்படும் இழப்பை வைத்து எப்படி அரசியல் செய்யலாம் என்று கூச்சலிடுகிறார்கள். ஆனால் ஒரு போதும் பெரும்பாலான அரசியல்வாதிகள் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை ராணுவத்தில் சேர்ப்பதே கிடையாது.

இதுவரை இறந்தவர்கள் எத்தனை பேர் அரசியல்வாதிகளின் குடும்பத்தார் என்று பாருங்கள். யார் கரையான், யார் பாம்பு என்று புரியும்.

இந்திய சுதந்திரத்திற்காக சுபாஷ் சந்திர போஸ் ராணுவ அணியில் அதிகமாக தமிழர்கள் இருந்ததால் தான் அதன் தலைமையகம் சென்னையாக இருந்தது அன்று. ஆனால் இன்று தமிழகத்திற்கே பாடம் எடுக்கிறது தேசப்பற்றை பற்றி பாம்புகள்.

இந்த தேசப்பற்று என்பது கரையான் புற்று கதை தான். இன்றைய தமிழ் நாட்டு கதையும் உலகத்தில் முதல் மூத்தகுடி நம் தமிழ் மக்கள். அத்தகைய மக்களை தேசப்பற்று என்ற ஒற்றை சொல்லில் இன்றும் வஞ்சித்து வருகிறது இந்திய அரசு. தேசப்பற்று என்பது கூட ஒருவித மாயை அல்லது ஒரு வகை போதை. அறுபது ஆண்டுகளுக்கு முன் தேசப்பற்று என்பது விடுதலையின் அடையாளம்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன் சேர, சோழ, பாண்டிய நாட்டின் விசுவாசம். அதற்கும் முன்பு... யோசிப்போம். தற்போது தேசப்பற்று என்பது தேசிய கீதம் ஒலிக்கும் போது எழுந்து

நிற்பதிலும், மூவர்ண கொடியின் சிறப்பை சொல்வதிலும், தேச தந்தை யார் என்று சொல்வதிலும், தேசிய கீதத்தை யார் இயற்றினார்கள் என்று சொல்வதிலும் தான் இருக்கிறது என்றால் அப்பேற்பட்ட தேசப் பற்று எனக்கு தேவை இல்லை என்றே தோன்றுகிறது.

நிறைய பேர் தேசப்பற்று என்பது கீதம் ஒலிக்கும் போது எழுந்து நிற்பதோடு முடிந்து விடுகிறது என்று நினைப்பார்கள் போலும். ஆனால் உண்மையாக அப்பேற்பட்ட சமுதாயத்தில் தான் நாம் வசித்துக் கொண்டு இருக்கிறோம் என்று சொன்னால் அது மிகை ஆகாது.

தேசப்பற்று என்பது நாம் சுய ஒழுக்கத்துடனும் ஓர் கட்டுபாட்டுடனும் நாம் இருக்கும் தேசத்தின் விதிமுறைகளை மீறாமல் வாழ்வது, அப்படி நாமும் இல்லை அத்தகைய தேசமும் இது இல்லை.

ஒரு போட்டியில் சர்வதேச அளவில் தமிழக வீரர் வெற்றி பெற்றால் இந்திய வீரர் வெற்றி என்று அனைவரும் குறிப்பிடுவார்கள். அதுவே இராமேசுவர மீனவர்கள் கொலை செய்யப்பட்டால் தமிழக மீனவர்கள் என்பார்கள். தமிழக மீனவர்கள் இதுவரை 600க்கும் மேற்பட்டவர்கள் சுட்டு கொல்லப்பட்டுள்ளார்கள். ஒரு மாநிலத்தின் மக்களை பாதுகாக்க தவறியது அரசு. அதற்கு இன்று வரை தீர்வும் இல்லை, எப்படி தேசப் பற்றுடன் இருக்க முடியும் நம்மிடம்.

பல வருடமாக நாம் சந்திக்கும் பிரச்சனைகளில் ஒன்று காவிரி நீர்.

பல ஆண்டுகளாக நீடித்து வரும் காவிரி பிரச்சனை குறித்து 1990 முதல் 17 ஆண்டுகள் விசாரித்த காவிரி நடுவர் மன்றம் அதன் இறுதித் தீர்ப்பை 05.02.2007 அன்று அளித்தது. அதை செயல்படுத்தும் அமைப்பான காவிரி மேலாண்மை வாரியம் இறுதித் தீர்ப்பு வெளியான 90 நாட்களுக்குள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதன்பின் 10 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், அவ்வாரியத்தை அமைப்பதற்காக இன்னும் போராட வேண்டியிருப்பது, இது இந்திய அரசியலின் மிகப்பெரிய சாப கேடாகும், பின்பு எப்படி வரும் சேதபற்று.

மீத்தேன் திட்டத்தை பல வளர்ச்சி அடைந்த நாடுகளே இத்திட்டத்தை கைவிடும் போது இந்திய அரசு இதை செயல்படுத்த தீவிர முனைப்பு காட்டுகிறது. அதுவும் நம் விளைநிலங்களில்,

விளைநிலங்களை வீணடித்து நமது மக்களின் வாழ்வாதாரத்தைப் பறித்துக் கொள்ளும் பகல் கொள்ளையே இந்த திட்டம்! நாம் ஒன்றும் வளைகுடா நாடு இல்லை வயல்வெளிநாடு. வளர்ச்சி என்ற பெயரில் முன்மொழியப்படும் இது போன்ற திட்டங்கள், கண்டிப்பாக மக்களின் வளர்ச்சிக்காக அல்ல. இவை, மக்களை வாழவும் கூட விடாமல் விரட்டியடிக்கும் திட்டங்கள். இது போன்ற திட்டத்தை செயல்படுத்தும் இந்திய அரசிடம் தேசப்பற்றுடன் வாழமுடியுமா?

நாம் அடுத்த சில ஆண்டுகளில் தமிழகத்தை அலற வைக்கப்போகிற சொல் ‘நியூட்ரினோ’.

மலையை குடைந்து ஆய்வு கூடம் என்ற பெயரில் அணு உலை கழிவுகளை கொட்டி வைக்க தேர்ந்தெடுத்த பகுதியே நம் மேற்கு தொடர்ச்சி மலைகள்.

இந்தியாவில் உள்ள பல அணு உலைகளின் கழிவுகளை இங்கு புதைத்து நம்மையும் சவகுழியில் தள்ளுவதே இந்திய அரசின் திட்டம், இப்படிப்பட்ட அரசின் மேல் வருமா தேசப்பற்று.

சரி, தமிழ் நாட்டை விடுவோம்

குஜராத் இனப்படுகொலை - நாட்டின் ஒரு பகுதியில் கலவரம் என்கிற பெயரில் ஒரு இரத்த வெறியாட்டம் நடத்தப்படுகிறது அதை தடுக்க வழியில்லாமல் வேடிக்கை பார்க்கிறது இந்திய அரசும், அதன் நுண்ணறிவு பிரிவான உளவுத்துறையும். பல்லாயிரக்கணக்கில் மக்கள் எரித்தும், வெட்டியும், கொல்லப்பட்ட அவலம் அதை தடுக்க துப்பில்லாத ஒரு நாடு.

சொந்த நாட்டு மக்களை பாதுகாக்க துப்பில்லை இதில் அந்நிய நாட்டு விவகாரங்களில் தலையீடு வேறு.

உதாரணத்திற்க்கே சில பிரச்சனைகளை மேல் குறிப்பிட்டு உள்ளேன் இன்னும் எண்ணிலடங்கா பிரச்சனைகள் உள்ளது நம் தேசப்பற்றை நிரூபிக்க.

நம் தமிழர் நாடான கரையான் புற்றுனுள் பாம்பாய் புகுந்து கொண்டு ஆட்சி நடத்தும் அயலர்களின் தேசப் பக்தி, தேசியக் கொடி எனும் துணிக்குள் தான் பதுங்கிக் கிடக்கிறது. மற்றபடி தேசத்தின் இறையாண்மையை சர்வதேச நிதி மூலதனத்திடமும், பன்னாட்டு சுரண்டல் நிறுவனங்களிடமும் தாராளமாக அடகு வைப்பார்கள். தேசியக் கொடியின் கீழே அமர்ந்து கொண்டு இதற்கான அடிமைப் பத்திரத்தை எழுதிக் கொடுப்பார்கள்.

நாடு என்பது அதில் வசிக்கும் மக்களின் நலன்களுக்காகத்தான். மக்களின் நலன்களை கொன்று, மக்களை கொன்று ஒரு நாடு வளர்கிறேன் என்று சொன்னால் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது

முன்பெல்லாம் கிரிக்கெட்டில் இந்தியா ஆடினால், நாம் வெற்றி பெற வேண்டும் என்று ஒரு எண்ணம் வரும்... ஆனால் இப்போதெல்லாம் அந்த மாதிரி எண்ணம் கனவில் கூட வருவது இல்லை.

1176 மதிப்பெண் எடுத்த தங்கை அனிதாவால் மருத்துவப் படிப்பு படிக்க முடியாமல் மனமுடைந்து தற்கொலை செய்து கொள்ள காரணமாக இருந்த இந்திய அரசின் மீது இருக்குமா தேசப்பற்று? ஒரு சிறந்த மருத்துவரை இழந்து விட்டோம்!

இன்று மருத்துவ படிப்பு நாளை பொறியியல், பிறகு கலை, அறிவியல், இப்படி அனைத்து படிப்புகளுக்கும் நீட் தேர்வு இந்திய அரசால் கொண்டுவரப்பட்டால் நமது பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகும். அனிதாவின் மரணத்தை நினைக்கும் போது எல்லாம் எனது மன குமுறல்களை வார்த்தையில் விவரிக்க நினைத்தால் இந்த தாள்கள் கண்ணீரில் நனைந்து போகும்.

எல்லையை பாதுகாக்க நிற்கும் வீரர்களின் உயிரை பாதுகாப்பது அரசின் கடமை, அதற்கு சுற்றியுள்ள நாடுகளுடன் நட்பு பாராட்டி உறவுகளை மேம்படுத்த வேண்டும். நம் எல்லையையும், உயிரையும் காக்கும் வீரர்களின் உயிரை நாம் காக்க முற்பட வேண்டும். அதை விடுத்து மேடையில் நின்று வீர வசனம் பேசி போர் என்ற பதட்டமான சூழலிலேயே வைத்து இருப்பது சிறந்த நிர்வாகத்திற்கு அழகல்ல. நம் குடும்பத்தை எண்ணி பார்க்கும் அதே கண்ணோட்டத்தில் எல்லையில் இருப்பவர்களின் குடும்பத்தையும் எண்ணி பாருங்கள்.

தேசப்பற்று என்பது ராணுவத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் தான் உள்ளது போன்ற பிம்பத்தையும் உருவாக்குகிறார்கள். அவர்களுக்கு கல்வி கற்று கொடுத்த ஆசிரியர்கள் இல்லையென்றால் எல்லையில் நின்று அவர்களால் எப்படி சிறப்பாக சிந்தித்து செயல்பட முடியும்? அவர்கள் தினமும் பசியாற உழவு செய்யும் உழவனுக்கும் தேசப்பற்று இல்லையா? எல்லையை காப்பது ஒரு வகை என்றால், எல்லையினுள் இருப்பவர்களின் வாழ்வாதாரம் தொடர்பானவற்றில் பங்கு கொள்ளும் மற்றவர்களும் தேசப்பற்றாளர்களே.

‘‘என் தாயின் கருவறையில்
கோடுகள் கிழித்து ரணமாக்கிவிட்டு இந்தியம்
பெயர் வைத்தது
தேசப்பற்று என்று‘‘

ராணுவ வீரர்களை குறை சொல்ல வேண்டும் என்பது நோக்கமல்ல, அவர்களின் பங்கு மதிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் அவர்களை வைத்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். யாருடைய தியாகத்தில் யார் பயன்பெறுகிறார்கள் என்பதை கவனிப்போம்.

**மன்னை ராம்**

அட்டைப்பட உதவி
VASA PHOTOGRAPHY
வசந்தன்
hp: 9786828973
monguski@gmail.com
vasa photography

# அம்மா

அழகாய் ஆகிறேன் உன் கருவில் தரித்ததாலே
அன்னையென்று அழைத்தேன் அறிவின் ஆசானான உன்னையே

உன்னாலே உதயம் கொண்டேன் உன்
உதிரத்தாலே உருவமும் கண்டேன்!

முதல் காதலில் விழுந்தேன் உன்னை பார்த்ததாலே
உன் கண்ணீர் துளிகளாலே

கோவமாய் கொட்டினாய், கொஞ்சமாய் கொஞ்சினாய்
நீயே கண்டிப்பானக் கரிசனத் தாயோ

அழுகும்போது அரவணைத்தாய் அடங்காமல்
திரியும்போது அடியும் கொடுத்தாய்

நீயே என் அழகு ராட்சசியோ
மெல்லிசை மழை ஒன்றும் அழகில்லை நீ
என்னை மௌனமாய் முறைக்கும் போது

ஆமாம் நீ என்னை கடிந்து கொண்டாலும்
கட்டுப்பாட்டோடு காக்கின்றாய்

அம்மா

அதனாலே

ஆயிரம் பிறப்பு கொண்டாலும் என்றும்
உன் குழந்தையாகவே பிறக்க பிரார்த்திப்பேன்
உன் அன்பை அனுபவிக்க
அம்மா என்று அழைக்க

**R.கிர்த்திகா**, B.Arch
ப்ரைம் கட்டிட எழில் கலைக்கல்லூரி.
கீவளூர்

# புதிய கைப்பேசி வாங்குகிறீர்களா?



செந்தில்குமரன்
மன்னார்குடி

ஒரு கைப்பேசி வாங்குவதற்கு முன் உங்களது தேவைக்கான அம்சங்களை பட்டியலிடுங்கள். சிலர் பேசுவதற்கு மட்டுமே பயன்படுத்துவார்கள், சிலரோ புகைப்படத்திற்காக பயன்படுத்துவார்கள். ஆனால் அனைவரும் நினைப்பது குறிப்பிட்ட தொகைக்குள் எல்லா அம்சத்துடன் கூடிய கைப்பேசி வேண்டும் என்பது.

அப்படி பார்க்கையில் தான் நாம் ஏமாந்து போகிறோம், 20MP camera என்று குறிப்பிட்டு இருப்பார்கள், படமெடுத்ததை சற்று பெரிதுப்படுத்தி பார்த்தால் தெளிவாக இருக்காது.

3000mAh battery என்று இருக்கும், ஆனால் மின்சேமிப்பு திறன் 8 மணி நேரம் கூட வராது.

2GB RAM அதனால் அதிவேகமாக செயல்படும் என்று மின்னலை போல விளம்பரப்படுத்தி இருப்பார்கள். ஆனால் ஆமையை போல தான் இயங்கும்.

இவை தான் புதிதாக கைப்பேசி வாங்குபவர்கள் பெரும்பான்மையாக பார்ப்பது. இந்த அம்சங்கள் பொருந்தி குறைந்த விலையுடன் இருந்தால் வாங்கி விடுவார்கள், ஆனால் வாங்கி ஆறு மாதத்தில் சர்வீஸ் சென்டருக்கும் வீட்டிற்கும் இடையேயான தூரத்தை அளவிட நேரிடும்.

சரி எப்படி தான் புதிய கைப்பேசியை தேர்வு செய்வது?

Loud speaker மற்றும் Mic பின்புறத்தில் இல்லாதவாறு பார்த்து வாங்க வேண்டும்.

CAMERA வை ஒப்பிடும்போது Mega pixel (MP)- ல் கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல் resolution எவ்வளவு என்று பாருங்கள்.

உதாரணத்திற்கு 5 MP with 1440*2560 resolution இருந்தால் புகைப்படம் அருமையாக இருக்கும். 12 MP with 240*320 resolution இருந்தால் புகைப்படம் தெளிவாக இருக்காது. 720*1020 ஆக இருந்தால் ஓரளவிற்கு தெளிவாக இருக்கும்.

Pixel Density தான் இந்த தரத்தை நிர்ணயிக்கிறது. புகைப்படம் எடுப்பதற்காக வாங்குகிறீர்கள் எனில் pixel density அதிகமாக காணப்படும் கைப்பேசியை தேர்வு செய்யலாம்.

மின்சேமிப்புக்கலன் (Battery) ல் லித்தியம் பாலிமர் (Li&Po) மற்றும் லித்தியம் ஐயான் (Li&Ion) தான் அதிகமாக தற்போது உபயோகிக்கப்படுகிறது. இதில் Li-Po பாதுகாப்பானது

மற்றும் எளிதில் சேமிப்புத்திறனானது குறையும். ஆனால் Li&Ion ஒரு வருடத்திற்கு மேலாக உபயோகிக்காமல் இருந்து மீண்டும் உபயோகிக்கும்போது வெடிக்கிறது மற்றும் இதன் சேமிப்புத்திறனானது அதிகம். விரைவில் Charge ஏறும், அதிக நேரம் இருக்கும் மற்றும் சூடாக வாய்ப்புள்ளது.

RAM ஐ பொறுத்தவரைக்கும் அது தரவுகளை சேமித்து வைக்கும் நினைவகம் மற்றும் PROCESSOR ஐ சார்ந்தே காணப்படும். சில கைப்பேசியில் 2 GB RAM US Snapdragon 420 கொடுத்து இருப்பார்கள் ஆனால் 2 GB with Snapdragon 620 இதைவிட வேகமாக செயல்படும்.

8 GB RAM வாங்குகிறீர்கள் என்றால் 4 GB தான் உங்களால் உபயோகிக்க முடியும். மீதமுள்ள 4GB I operating system எடுத்துக் கொள்ளும். அதிவேகமாக செயல்படும் processor பற்றி அறிந்து கொள்ள இதனை சொடுக்கவும்

https://www.google.co.in/amp/m.gadgetsnow.com/slideshows/9&smartphones&powered&by&the&worlds&fastest&processor/ampphotolist/56516055.cms

இந்த அம்சங்கள் நிறைவானதாக அமைந்தாலே மற்ற அம்சங்களும் சிறப்பாக அமைந்து விடும்.

மேலும் SAR Rate (specific absorption rate) குறைவாக உள்ள கைப்பேசியை தேர்வு செய்வதன் மூலம் நோயிலிருந்து நம்மை பாதுகாத்து கொள்ளலாம். SAR Rate என்பது கைப்பேசி வெளியிடும் கதிர்வீச்சை 1 கிலோ அளவு உடல் உறுப்பானது எத்தனை சதவீதம் உள்வாங்கி கொள்கிறது என்பதாகும். 1.6 W/kg க்கு குறைவாக SAR Rate உள்ள கைப்பேசி வாங்குவது பாதுகாப்பானது.

எது எப்படியோ உங்கள் கைப்பேசிக்கு அடிமையாகி விடாமல், முடிந்தளவு உபயோகத்தை குறைத்துக் கொண்டு உங்கள் நலனில் கவனம் செலுத்துங்கள்.

மேலும் தகவல்களுக்கு
senthil1092gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

**செந்தில்குமரன்**
மன்னார்குடி

# நீட் என்னும் உயிர்க்கொல்லி

RIP
நாளை எத்தனையோ பேரின் உயிர் அவளால் காப்பாற்றப்பட்டிருக்கலாம்
இன்று அவள் காப்பாற்றப்பட்டிருந்தால்.

வசதி படைத்தோருக்கோ அது வெறும் மருத்துவப் படிப்பு ஆனால்
லட்சியத்திற்காக பல இரவுகளை விளக்கொளியில் எரித்து தியாகம் செய்பவர்களுக்கு
அதுமட்டும்தான் வாழ்க்கை.

வாழ்கையே இல்லையென்றானபின்
வாழ்ந்தென்ன லாபமென்று அவள் தன்
மூச்சை நிறுத்திக் கொண்டிருக்கலாம்.

தன் எதிர்காலம் பற்றி அவள் நினைத்துப் பார்த்திருப்பாள் ஏழைகளுக்கு இலவசமாய் மருத்துவம் பார்ப்பதாய், எத்தனையோ பெண்களுக்கு இலவசமாய் பிரசவம் பார்ப்பதாய், தொழுநோயாளிகளின் புண்களுக்கு களிம்பு தடவுவதாய், ஊசி போட்ட பின் குழந்தைகளின் தலையை புன்சிரிப்போடு தடவிக் கொடுப்பதாய், மரணித்த நோயாளிகளின் திறந்திருக்கும் கண்களை பெருமூச்சு விட்டபடி மூடுவதாய்.

இதையெல்லாம் நினைத்துப்பார்த்தவள் ஸ்டெத்தஸ்கோப் தொங்க வேண்டிய தனது கழுத்தில் தாம்புக் கயிறை எப்போது நினைத்துப் பார்த்திருப்பாள்.

மத்திய அரசே!!
மாநில அரசே!!
பாடத்திட்டமே!!
எனக் காரணங்கள்
ஆயிரம் கூறலாம்
அரசியல் ஆயிரம் செய்யலாம்..
ஆனால் உலகை விட்டுப் பிரிந்த ஒற்றை அனிதாவை எங்கணம் மீட்பது.

செங்கொடிக்கும், முத்துக்குமாருக்கும், விக்கினேசுக்கும் நடத்துவதைப் போல அனிதாவுக்கும் நினைவேந்தல் ஒன்று நடத்திவிடலாம். ஆனால் இன்னமும் பல இரவுகளை தியாகம் செய்தபடியும், மருத்துவராய் தன்னை நினைத்துப் பார்த்தபடியும் படித்துக் கொண்டிருக்கும் ஆயிரம் ஆயிரம் அனிதாக்களின் கனவுகளுக்கும், வாக்களித்த நம் ஆறு கோடி பேரிடமும் என்ன பதில் இருந்துவிடப் போகிறது RIPஐத் தவிர.

**கார்த்திக் கண்ணன்**
மன்னை

# வேடிக்கையாளன்

- மன்னை ரஞ்சித்



தெருக்குழாயில் தேவையற்று நீர் வழிந்தால்
வேடிக்கைப் பார்ப்பான்

குழாயை அடைப்பவனை
வினோதமாக பார்ப்பான்

மனநோயாளி தெருவில் போனால்
வேடிக்கைப் பார்ப்பான்

நோயாளியிடம் பேச முயல்பவனை
வினோதமாக பார்ப்பான்

ஊரில் எதும் வாழ்வாதார பிரச்சனை என்றால்
வேடிக்கைப் பார்ப்பான்

வீதியில் இறங்கி போராடுபவனை
வினோதமாக பார்ப்பான்

சமுதாயப் பிரச்சனைகளை
வேடிக்கைப் பார்ப்பான்

சந்ததிகளுக்காக போராடுபவனை
வினோதமாக பார்ப்பான்....!!

S.A. கானபிரியா
6ஆம் வகுப்பு.
தரணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
மன்னார்குடி












நீட் தேர்வில் இருந்து நிரந்தர விலக்கு கேட்டும், மாணவி அனிதாவின் இறப்பிற்கு நீதி கேட்டும், கல்வியை பொது பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு மாற்ற கோரியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 07-09-2017 (வியாழன்) அன்று பெரியார் சிலை அருகில், மன்னார்குடியில் மாலை 4 மணி அளவில் மன்னார்குடி இணையதள நண்பர்களால் ஒருங்கிணைக்கப்பட்டது.

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

+91 8220567322 http://maintharkal.mannai.in